விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | மார்கழி 19 | ராபி ஆகி 21 | இதழ் 327
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 3-1-1986


கிழக்கில் இரு சம்பவங்கள்:

## 9 ஆயுதப்படையினர் காயம்!

## வயோதிபர் பலி! ஒரு ஆண், பெண் படுகாயம்

(மட்டக்களப்பு)

வீதியில் புதைத்து வைத்திருந்ததாகக்கருதப்படும்கண்ணிவெடியை பார்க்கச்சென்ற பொலிசாருக்கும் தமிழ்தீவிரவாதிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் இரு பொலிசார் சாயமுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை மட்டக்களப்பு நகரிலுள்ள தாண்ட

(5-ம் பக்கம் பார்க்க)

நடுக்கடலில் நடந்த கொள்ளை:

## தமிழகம் சென்ற அகதிகள் வெறும்கையுடன் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலிருந்து தமிழ் நாட்டுக்கு அகதிகளாக படசில் சென்றுகொண்டிருந்த 20 பேரின் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியானஉடைமைகள் 'கடல் கொள்ளையர்'

(8-ம் பக்கம் பார்க்க)

# டில்லி வருமாறு கூட்டணிக்கு

# இந்திய அரசு அழைப்பு!

## முக்கிய விஷயமாக ஆலோசனை

(சென்னை)

தமிழர் விடுதலை கூட்டணிக்கு இந்திய அரசு அவசர அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக சிலமுக்கிய விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்த அவசரமாக புதுடில்லி வருமாறு தமிழர் விடுதலை கூட்டணிக்கு இந்திய அரசு விடுத்திருக்கும் அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு தெரிவித்திருக்கும் சில யோசனைகள்பற்றி புதுடில்லியில் கூட்டணியுடன் இந்திய அரசு அதிகாரிகள் ஆலோசனை நடத்துவார்கள்

இதே நேரத்தில்; தமிழர் விடுதலைக் கூட்டணி கடைசியாக இந்திய அரசுக்கு சமர்ப்பித்திருக்கும் மாற்றுயோசனைகள் குறித்து இலங்கை அரசு தனது கருத்துக்களை இந்திய அரசுக்கு மறைமுகமாகத் தெரிவித்துவிட்டது என்றும், இலங்கை அரசு பிரதிநிதிகளுக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணியினரும் ஒரு சந்திப்பை ஏற்படுத்தி பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடரவே புதுடில்லி வருமாறு தமிழர் விடுதலைக் கூட்டணிஅழைக்கப்பட்டிருப்பதாகவும் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப்பேச்சுவார்த்தைகளை புதுடில்லியில் நடத்தகூட்டணியும் கொழும்பில் சந்திப்பதற்கு

(5-ம் பக்கம் பார்க்க)

நிலாவெளி?

## 91 பேர் விடுதலை

(திருகோணமலை)

திருகோணமலை நிலாவெளியில் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்ட 181 பேரில் 91 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மிகுதி 90 பேரும் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

சிறிமாவோ குடியுரிமை:

## கட்சித் தலைவர்கள் கருத்து

(கொழும்பு)

"திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிறகு குடியுரிமை வழக்கப்பட்டதற்கு உலகில் அதிக மகிழ்ச்சியடைபவன் நான் தான். எனதுமுன்னாள் கட்சித் தலைவி மீண்டும் அரசியலில் பிரவேசிப்பதை நான் வரவேற்கிறேன். இந்த நாட்டில் ஜனநாயகத்தை இது மேலும் பலப்படுத்துகிறது" என்று நிதிஅமைச்சர் ரொனி டிமெல், கருத்து தெரிவித்தார்.

சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வா, சிறிமாவுக்கு குடியுரிமை வழங்கப்பட்டதை வரவேற்பதாக கூறினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரம் முற்றுகை: ஒருவர் பலி; பலர் காயம்!

### எதிர்த் தாக்குதலும் இடம்பெற்றது

[கிளிநொச்சி]

உருத்திரபுரம் பகுதி இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். இச்சம்பவத்தில் எதிர்த்தாக்குதல் ஒன்றும் நடந்தது

இ. போ. ச. பஸ் ஒன்றில் சாதாரண உடைகளில் சென்றோரால் எட்டாம் வய்க்கால் பகுதியில் உள்ள வீடொன்று சோதனையிடப்பட்டது. விளாக்கர் பொன்னம்பலம்-அன்ரன் என்பவரின் வீடே சோதனையிடப்பட்டு, சில மோட்டர்சள் இராணுவத்தால் கொண்டு செல்லப்பட்டன. இதே பகுதியில் சில வீடுகளும் சோதனையிடப்பட்ட பின்னர் திரும்பிவரும் வழியில் எதிர்த்தாக்குதல் ஒன்று ஏழாம் வாய்க்கால் இந்துமகாவித்தி

(5-ம் பக்கம் பார்க்க)

## 'யாழ்தேவி' இன்று காலை 8-30க்கு புறப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

ரயில் 'என்ஜினி'ல் ஏற்பட்ட கோளாறு காரணமாக நேற்று 'யாழ்தேவி' கொழும்புதிரும்பவில்லை.

'யாழ்தேவி' இன்று காலை எட்டரை மணிக்கு யாழ். ரயில் நிலையத்திலிருந்து கொழும்புக்குப் புறப்படும். அதே நேரத்தில் 'இன்ரசிற்றி' ரயில் இன்று வழமைபோல் யாழ்ப்பாணம் வந்துகொழும்பு திரும்பும்.

'என்ஜின்' கோளாறுகாரணமாக நேற்று நண்பகல் 'யாழ்

(5-ம் பக்கம் பார்க்க)

## "பொதுத்தேர்தலை நடத்தி வடக்கு, கிழக்கு மக்கள் நிலையை அறியவேண்டும்"

### திருமதி சிறிமாவோ கருத்து

(கொழும்பு)

"தமிழ்மக்கள் என்ன தீர்வு வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்கவேண்டும், பொதுத்தேர்தல்மூலம் வடக்கு கிழக்கில் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்னைக்குத்தீர்வுகாணவேண்டும்".

குடியுரிமை வழங்கப்பட்ட சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றுமுன்தினம் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(5ம் பக்கம் பார்க்க)


## கண்காணிப்புக் குழுவினர் நாளை யாழ். விஜயம்

(கா. யோகநாதன்)

யாழ்ப்பாணத்திற்கு இரண்டாவது முறையாக நாளை சனிக்கிழமை வரும் கண்காணிப்புக்குழுவினர், பாதிக்கப்பட்டவர்களையும் பிரஜைகள் குழுக்களையும், சந்திப்பதுடன், பாதிக்கப்பட்ட இடங்களையும் நேரில் பார்வையிடுவார்கள்.

யாழ் நகரில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக வண்ணை பெருமாள் கோவில் சுற்றுடல்

(5-ம் பக்கம் பார்க்க)



சேலத்தில் நடைபெற்ற மூன்றுவது உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் மாநாட்டில் இலங்கைக் கிளை சார்பில் கலந்துகொண்ட அதன் துணைத் தலைவர் திரு. ச. செந்துராசா, ஈழத்தமிழர் போராட்டம் பற்றிய ஆதரவு தீர்மானங்களை நிறைவேற்றியதற்காக மாநாட்டின் வரவேற்புக்குழு செயலாளரினல் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்படுகிறுர். (செய்தி 3ம் பக்கம்)

## நிலாவெளி தீவிரவாதிகள் முகாம்: அரசதரப்பில் வெளியான தகவல்

(கொழும்பு)

நிலாவெளியிலுள்ள தீவிரவாதிகள் முகாமொன்றிலிருந்து பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வெடிமருந்துகளை தேசியபாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேரில் சென்று பார்வையிட்டார்.

கிழக்கு மாகாணத்திற்கு அவர் நேற்று விஜயம் செய்திருந்த பொழுதே இவற்றை அமைச்சர் பார்வையிட்டார்.

'புதியதோர் உலகம்' என்ற பிரசார நூலும் 2 இயந்திரத் துப்பாக்கிகளும், வெடிமருந்து

(5-ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

1½ பரப்பு காணி கிணற்றுப் பங்குடன் தாவடி முருகமூர்த்தி கோவிலுக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு: சி. நாகேஸ்வரன், லட்சுமி பிறியை, பத்திரகாளிகோவில் ஒழுங்கை, தாவடி தெற்கு, கொக்குவில். [2744]

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் [கில்னர் லேன்] நவீன வசதியுடன்கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு. மூன்று படுக்கையறை, ஹோல், குசினி, சுற்றுமதில் கொண்டது. மின்சாரம், பைப்வசதிகள் உண்டு. லொறி நிறுத்தக்கூடிய விஸ்தீரணம் உண்டு. காணி 1 பரப்பு 14 குளி, விலை 6 லட்சம் வரைஎதிர்பார்க்சப்படும்: 435, கஸ்தூரியார்வீதி, (கில்னர் ஒழுங்கை), யாழ்ப்பாணம். [C 1]

## தேவை

வீட்டை பராமரிப்பதற்கு காவல்காரர் ஒருவர் தேவை. விண்ணப்பதாரி நிரந்தரமாக அந்தவீட்டில் வசிப்பது அவசியம். தொடர்பு:- 10, வைமன் வீதி, யாழ்ப்பாணம். [C 2]

ஆண்களுடைய உடுப்புகள் கட்டிங் செய்து தைக்கக்கூடிய அனுபவமுள்ள ஆண் தொழிலாளர்கள் தேவை. எமது தொழிற்சாலைக்கு அருகில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். நேரில் வரவும் முடிவு திகதி 5-1-86 ''மதர்லான்ட்'' காமென்ட் கோயில் வீதி தெற்கு, மாவிட்டபுரம். (C 15)

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் சைவ ஹோட்டலுக்கு சைவ உணவும் சகல பலகாரவகைகளும் தயாரிக்க அனுபவமுள்ள பண்பும் நல்லொழுக்கமும் உள்ள சமையல்காரர்கள் தேவை. பிராமணர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் தேனீர் பட்டறைக்கும் சுறுசுறுப்பானபையன்தேவை. திறமைக்கேற்ப வேதனம் கொடுக்கப்படும். விளம்பர இல: C-7, C/o ஈழநடு,, யாழ்ப்பாணம். (C-7)

## வகுப்புகள்

G. S. Q. (Bio) 1986 New batch will start on *11 - 01 - 1986* Home Science Diploma [மனையியல் டிப்பிளோமா] Montessori Diploma Teachers Training [பாலர் பயிற்சி] வகுப்புகள் எதிர்வரும் *11 - 01 - 1986* ஆரம்பமாகின்றன. சேரவிரும்புவோர் நேரில் வந்து காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ளவும். செய்முறை பயிற்சிகளுக்கு ஏற்ப சிறந்த முறையில் விஞ்ஞான ஆய்வு கூடம் அமைக்கப்பட்டுள்ளது. அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [2732]

## மணப்பந்தல்

இலங்கை இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த இலங்கை மின்சாரசபையில் வேலைபார்க்கும் மணப்பெண்ணுக்கு வயது 40 உட்பட 36 மேல் அரசாங்கம் அல்லது வேறு கூட்டுத்தாபனங்களில் வேலைபார்க்கும் உத்தியோகஸ்தர் விரும்பத்தக்கது. நல்ல சீதனம் கொடுக்கப்படும். தொழில், சாதகக் குறிப்புடன்விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2702, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (2702)

### சாவகச்சேரி நகராட்சிமன்றம் வரவு-செலவுத் திட்டம்-1986

(255ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின், 1979-ம் ஆண்டின் 13-ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178(3)ம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட 1986-ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டம் தற்பொழுது இவ்வலுவலகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரங்களில் இதனைப் பார்வையிடலாமென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்,
(தலைவருக்காக)

நகராட்சிமன்ற
அலுவலகம்,
சாவகச்சேரி,
*30-12-1985.* (A 10)

### சாவகச்சசேரி நகராட்சி மன்றம் உப வரவு, செலவுத் திட்டம்-1985

(255-ம் அத்தியாமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின், 1979-ம் ஆண்டின் 13-ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3)ம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட 1985-ம் ஆண்டுக்குரிய உப வரவு-செலவுத் திட்டம் தற்பொழுது இவ்வலுவலகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரங்களில் இதனைப் பார்வையிடலாமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்,
(தலைவருக்காக)

நகராட்சிமன்ற
அலுவலகம்,
சாவகச்சேரி,
*30-12-1985.* (A 11)

### A/L 86

தூய பிரயோககணிதம்
பகல்நேர வகுப்பு

7-30: காவிகள்
8-45: நேர்கோடு

10-30: வட்ட இயக்கம்
11-45: சிக்கல் எண்

ஆரம்பம்: 3-1-86

ஆசிரியர்: ரவிமோகன்

யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்) (2746)

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட பொருட்கள் விற்பனைக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் - 3712
2. சுவீப்பிங் மாவு - 105 கிலோ
3. சுவீப்பிங் சீனி - 23 கிலோ 750 கிராம்

முடிவுத் திகதி: 10-01-1986

விண்ணப்பப் பத்திரங்களுக்கும், விபரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி,
*1985-12-31.* (A-7)

### 30-ம் நாள் நினைவு அஞ்சலி



அமரர்
கந்தையா இராசத்தினம்
(இரத்தினம்)
(முன்னாள் தலைவர்,
காமாட்சியம்பாள்
ஐ.கை. சங்கம், நீர்வேலி)
அன்னைமடியில்; 10-8-1934
ஆண்டவன் அணைப்பு:
5-12-1985
திதி: 3-1-1986 (அபரபக்க அட்டமி திதி]

நீர்வேலி காமாட்சியம்பாள் - ஐ. கைத்தொழில் சங்கத்தின் தலைவராகவும், சிறந்த தொழில் மேதையாகவும் விளங்கி சங்கத்தினதும், சமூகத்தினதும் வளர்ச்சிக்காக உழைத்து, எம்மெல்லோரது இதயங்களிலும் நீங்காநிலைபெற்று அமரராகிவிட்ட தங்களின் நினைவுஎங்கள் நெஞ்சத்தை விட்டு என்றும் அகலா.

தாங்கள் எம்மைவிட்டகன்றாலும் உங்கள் வற்றாத அன்பு, தளராத அணைப்பு, அகமும், முகமும் மலர்ந்த வரவேற்பு எல்லாம் எங்கள் மனதில் பசுமையாகி என்றும் எங் வாழ்வின் பாதையை வழி நடாத்தும். உங்கள் ஆத்ம சாந்திவேண்டி ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புத்தாய், மனைவி,
பிள்ளைகள்,
சகோதரர்கள்
குடும்பத்தினர்,
மைத்துனர்கள்
குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்.

'ஸ்ரீகந்த வாசம்,'
நீர்வேலி வடக்கு,
*3-1-86.* (C-13)

### பதவி வெற்றிடம்

வல்வெட்டித்துறை நகர சபை செயலாளர் அவர்களால் கீழ்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1985-01-15ம் திகதிவரை பதிவுத் தபால் மூலம் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரிகள் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தகுதிகளுள்ளவராக இருத்தல் வேண்டும்.

**(1) பதிவேட்டுக்காப்பாளர்**

கல்வித் தகமைகள்:-

1. கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் [சாதாரணம்] பரீட்சையில் சித்தி பெற்றிருக்கவேண்டும். க. பொ. த. [உயர்தரம்] சித்தி பெற்றவர்கட்கு விசேட சலுகை வழங்கப்படும்.
2. வயது: 25—35 உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
4. தட்டச்சு தமிழ், ஆங்கிலம் இரண்டும் நன்கு தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
5. எழுதுநர் பதவியில் முன் அனுபவம் உள்ளவர்களும், ஆங்கில அறிவு உள்ளவர்களுக்கும் முதலிடம் அளிக்கப்படும்.
6. வேலை வங்கியில் பதிவு செய்தவராக இருத்தல் வேண்டும்.

**(2) மின்சாரத் தொழிலாளர்**

கல்வித் தகமைகள்:-

1. கனிஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. வயது 21 க்குமேற்பட்டவராகவும், 40 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3. வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
4. மின்சார சம்பந்தமான தொழில் நுட்ப பயிற்சிநெறியில் தேர்ச்சி பெற்றவருக்கும், தொழில் அனுபவம், சம்பத்தில் நின்று வேலை செய்யக்கூடியவருக்கும் முதலிடம் அளிக்கப்படும்.
5. மின்சார வேலைகளில் முன் அனுபவம் பெற்றவர்களாயின் கல்வித்தகமையில் தளர்த்தப்படும்.

விண்ணப்பங்களை ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு உரிமையுண்டு.

க. சுப்பிரமணியம்,
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை,
நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
*31-12-1985* [A 09]

### "வெகுஜன விழிப்புத் தினம்"

[இறுப்பிட்டி]

புங்குடுதீவு வாழ் பொதுமக்களின் ஆதரவில் வெகுஜன விழிப்புத்தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை புங்குடு தீவு பிரான்சிஸ் சவேரியார் ஆலய முன்றலில் நடைபெற்றது.

விழிப்புத்தினக் கூட்டத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

### இடமாற்றம்

[இறுப்பிட்டி]

புங்குடுதீவு அஞ்சல் அலுவலகத்தில் இரண்டாந்தரத் தபாலதிபராகக் கடமையாற்றிய திரு. க. பரமானந்தம் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

### மின்தடை

யாழ். மாநகர சபை எல்லைக்குள்

இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

*1986-01-05*-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய திருத்த வேலை காரணமாக காலை 8-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை யாழ். மாநகர சபை எல்லைக்குளுள்ள எல்லா இடங்களுக்கும் மின் விநியோகத்தடை ஏற்படும் என சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இம் மின்தடையால் பாதிப்புறும் சகல மின்நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னுகம்.
(A 08)

### வகுப்புகள்

E. C. E — II (London) *86/87* (C. E. I.)
Draughtsmanship, Quantity Surveying (City and Guilds)
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
E.C.E — I (London) *1987*.
*11-01-1986* ஆரம்பமாக உள்ளது.
விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்:
அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(2729)

### விக்ஞ டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

10-வது வருட சேவை மீண்டும்

O/L

Day Clases
8-30 — 1-30
Evening Classes
2-15 — 4-30
SAT. SUN. 8-30—1-30
புதிய பிரிவு: 6-1-86

5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம்
புதிய வகுப்புக்கள் 6-1-86
[2-15—4-30]

முக்கிய குறிப்பு:

★ சிறந்த பெறுபேற்றுடன் பரீட்சையில் சித்திபெற எமது நிறுவனம் நிச்சயம் கைகொடுக்கும். கடந்தகால பரீட்சை முடிவுகள் இதற்கு சான்ருகும்.

★ பலரின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வருடம் 5-ம் வகுப்பு ஆரம்பமாகின்றது.

# "இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து ஐ. நா. சபையில் இந்தியா குரல் எழுப்பவேண்டும்!"

## தமிழனுக்கு உணர்வு இல்லை என்கிறுர் அன்பழகன்

(சேலம்)

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து ஐ. நா சபையில் இந்தியா குரல் எழுப்பவேண்டும்என்று சேலத்தில் நடந்த உலகத் தமிழ் பண்பாடடுமன்ற மாநாடு மத்திய அரசை வற்புறுத்தியது.

### மாநாடு நிறைவு

உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு சேலம் தமிழ் சங்கத்தில் நடந்தது. 3நாட்களும் தமிழ் நாசரிகம், தமிழ் பண்பாடு, தமிழ்மொழி, தமிழ் கலை கலாசாரம் ஆகிய ஐந்து தலைப்புக்களில் ஆய்வரங்கம் நடத்தப்பட்டது.

மலேசியா, இலங்கை, மொரீசியஸ், பாரீஸ், தாய்லாந்து, சிங்கப்பூர் உட்பட பலவெளி நாட்டுத் தமிழ் அறிஞர்களும் இதில் கலந்துகொண்டு உரையாற்றினுர்கள்.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் சிவஜெயப்பிரகாஷ் மதுரை காமராஜர் பல்கலைக் கழக விளையாட்டுத்துறை ஆசிரியர் கே. வி. கோபாலகிருஷ்ணன் பாளையங்கோட்டை யோவான் கல்லூரி மாணவர் சவுந்தர் ஆகியோர் தமிழரின் பழங்கால போர்முறைகளான வாட் சண்டை சிலம்புச் சண்டை போன்றவற்றை நடத்திக்காட்டினுர்கள்.

### தீர்மானங்கள்

நிறைவு விழாவிற்கு வழக்கறிஞர் வேணுகோபால் தலைமை வகித்தார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கி உலகத் தமிழர் பண்பாட்டு மாநாட்டுத் தலைவர் இரா ந வீரப்பன் பேசினுர். சாந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன், தமிழ்நாடு ஜனதாக் கட்சிச் செயலாளர் கோ. கலிவரதன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் உமாமகேஸ்வரன் (முகுந்தன்), டாக்டர் ஜி. சூடாமணி, வழக்கறிஞர் வி சி குழந்தைவேலு. புலவர்சோலை இருசன் ஆகியோரும் பேசினுர்கள்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்வருமாறு:

### இலங்கைத் தொடர்பை துண்டிக்க.....

"இலங்கை அரசின் தமிழ் இனப்படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து ஐ. நா. மன்றத்திலும், மனித உரிமை மன்றத்திலும் குரல் கொடுக்குமாறு இந்திய அரசைக்கேட்டுக்கொள்வது,

"இலங்கை அரசுடன் உள்ள எல்லா தொடர்புகளையும் துண்டித்துக் கொள்வதுடன் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களையும் அங்கீகரிக்க வேண்டும் என மாநாடு மத்திய அரசை வற்புறுத்துகின்றது.

"பிரெஞ்சு அரசின் பிடியில் உள்ள காலனி நாடுகள் முழு அரசுரிமை பெறவேண்டும்.

"ஐ நா. விலும், அணிசேரா நாடுகள் பேரவையிலும் கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் சமாதான வளர்ச்சிப் படைகள் அமைத்து இனவொழிப்பு கொடூரங்களைத் தடுக்கவேண்டும்.

"நாடற்ற தமிழர்களாக இலங்கை, பர்மா மற்றும் சில நாடுகளில் உள்ள 30 லட்சம் பேருக்கு அந்தந்த நாடுகள் குடியுரிமை வழங்கவேண்டும்.

"தமிழ்மொழியை கல்லூரிக் கல்விவரை உயர்த்த வேண்டும் தொடக்கப்பள்ளிமுதல் 10-ம் வகுப்புவரை தமிழை கட்டாயமொழியாக்க வேண்டும்.

"மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழிக் கல்வியை (உலகத் தமிழ் பணித்திட்டம்) அயல் நாடுகளுக்கும் விரிவுடடுத்த வேண்டும்.

"உலகத் தமிழ்ச்சங்கம் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

"பொங்கல்விழாவை உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் கொண்டாடுவது."

மேற்கண்ட தீர்மானங்கள் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சாது சாரங்கபாணி இறை வணக்கம் பாடினுர். சாரங்கபாணி, இளந்தமிழன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### அன்பழகன் பேச்சு!

2-வது நாள் மாநாட்டில் தி. மு. க. பொதுச்செயலாளர் அன்பழகன் கலந்துகொண்டு பேசினுர். அப்போது அவர் கூறியதாவது:-

"தமிழனுக்கென்று ஒருபண்பாடு இருப்பதாக என்னுல் கருதமுடியவில்லை. நிலைபெயர்ந்து தெளிவற்று குழப்பவாதியாக தமிழன் இருக்கிறுன்.

"இன்னும் சொல்ல போனுல் குழப்பவாதிகள் பின்னுல் செல்பவனுக இருக்கிறுன். இதனுல் அதற்கு வடிவம் கிடைக்கவில்லை.

"இங்கே பேசிய இலங்கைத் தமிழ்ப் பெண் மகேஸ்வரி ஆறு கோடி தமிழர்கள் இருக்கிறீர்கள். நீங்கள் நினைத்தால் முடியாத காரியமா என்று கேட்டார். அதேபோல் மலேசியாவைச் சேர்ந்த ராமனும் குடியுரிமை இல்லை என்றுர். நான் அவர்களுக்கு ஒன்றைச்சொல்ல விரும்புகிறேன்.

### உணர்வு இல்லை!

"நாங்களும் நாடற்றவர்களாகத்தான் இருக்கிறேும் நான் பிரிவினை கேட்பதாகக் கருதவேண்டாம்.

"தமிழ்நாட்டு அரசியலை விளக்குவது அல்ல என் நோக்

(7-ம் பக்கம் பார்க்க)

## உலகச் செய்திகள்

## இன உணர்வு வருவது எப்போது?

[சேலம்]

தமிழனுக்கு இன உணர்வு வருவது எப்போது என்று சேலம் மாநாட்டில் இலங்கைத் தமிழ் பெண் வீராவேசமாசப் பேசினுர்.

சேலம் தமிழ்ச் சங்கத்தில் உலகத் தமிழ் பண்பாட்டு 2வது நாள் மநாடு நடந்தது. முதலில் நடந்த ஆய்வரங்கத்திற்கு ஆரூர் கவிஞர் சாது. சாரங்கபாணி தலைமையும் வழக்கறிஞர் வேணுகோபால் முன்னிலையும் வகித்தனர். கோ நடேசன் [மலேசியா]தமிழகமும் மலேசியாவும் என்ற பொருளிலும் 'மலேசியா சிங்கப்பூர் என்ற தலைப்பில் உலகநாதனும் பேசினர்.

### மலர்வெளியீடு

மாநாட்டு மலர்வெளியீட்டு விழா நடந்தது. இதற்கு ஊ. தங்கவேலு தலைமை வகித்தார். சேலம் கம்பன் கழகச் செயலாளர். பி. சி. சீதாபதி வெளியிட முதல் மலரை டாக்டர் ஏ. ஆர். சரஸ்வதி பெற்றுக்கொண்டார். மலர் சிறப்புரையை வன்னிய அடிகள் ஆற்றினுர். மூன்றுவதாக நடந்த ஆய்வரங்கத்திற்கு மதுரை தமிழ் ஈழ தகவல்நிலைய பொறுப்பாளர் குமாரி மகேஸ்வரி வேலாயுதம் தலைமை வகித்துப் பேசினுர். அப்போது அவர் வீராவேசத்துடன் கூறியதாவது:

"இன்று தமிழ்ப்பண்பாட்டு கலாசாாம் ஒரு பகுதியில் அழிக்கப்பட்டு வரும் நேரத்தில் இங்கே உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு நடந்து வருகிறது. இந்த நேரத்தில் இலங்கையில் எங்களுடைய மக்கள் சுட்டுக்கொல்லப்படுகிறுர்கள். அங்கே பச்சை ரத்தம் ஆருக ஓடுகிறது.

"உண்மையான தமிழ்ப் பண்பாடு என்பது காதலும் வீரமும்தான். ஆனுல் அது தமிழகத்தில் இருக்கிறதா? ஆங்கிலத்தில் சில தமிழ் சொற்களைக் கலந்து பேசுகிறுர்கள்.

"இலங்கையில் பெரும்பான்மையாக உள்ள இனத்தால் அழிக்கப்படடுவரும் நாங்கள் தமிழைக் காக்க போராடி வருகிறேும் ஆனுல் தாய்தமிழ் நாட்டில் அந்த உணர்வு இல்லை. இன்று கல்லூரி மாணவ மாணவிகளிடம் தமிழ் தெரியும என்று கேட்டால் எங்களுக்குத் தமிழ் கொஞ்சம் கொஞ்சம் தெரியும் என்று பெருமையாகக் கூறுகிறுர்கள். தமிழைப் பாதுகாப்பதில் நாங்கள் காட்டும் தீவிரம் உங்களுக்கு இல்லாமல் போய்விட்டதா?

"ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். கோடிக் கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. எங்கே தமிழன் வீரம், எங்கே தமிழ்ப் பண்பாடு?

"கல்லானுலும் கணவன் என்று கற்பு நெறியுடன் வாழ்ந்த பெண்கள் அங்கே கற்பழிக்கப்பட்டு வருகிறுர்கள். இதுவரை மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். இரவு நேரத்தில் "அய்யோ அய்யோ" என்று மதறும் அந்தத் தமிழ்ப்பெண்களின் குரல் உங்களுக்குக் கேட்கவில்லையா?

"தமிழனுக்குச் சூடு சுரணை ஏற்படவில்லையா? ஈழத்து தமிழ்ப்பெண்களைப்பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும் என்று பேசாமல் இருக்கின்றீர்களா? வீரத்தமிழ் மறவர்கள் எங்கே போய்விட்டார்கள்?"

புவனு ஜெயராமன் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார். புலவர் ராஜீ கல்வெட்டுக்கள் பற்றியும் சுப்பிரமணியம் "தற்காலத் தமிழர்கள்" என்பது பற்றியும் ஆய்வுரை நிகழ்த்தினர். அரங்கச் செயலாளராக வழக்கறிஞர் பி. சி குழந்தைவேலு கடமையாற்றினுர்.

## "லிபியாவை தாக்கினுல் மேற்காசியாவில் யுத்தம் மூழும்!"

### லிபியத்தலைவரின் எச்சரிக்கை

[திரிபொலி]

"லிபியாவின்மீது எந்தவொரு நாடும் தாக்குதல் ஒன்றை நடத்தினுல் மேற்காசய பிரதேசமெங்கும் ஒரு முடிவில்லா யுத்தத்தைலிபியா ஆரம்பிக்கும்" என்று லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

திரிபொலியில் செய்தியாளர்களிடையே பேசிய கடாபி "அமெரிக்காவோ, இஸ்ரேலோ லிபியாமீது தாக்குதலை நடத்தினுல் அதன் விளைவு பயங்கரமானதாக இருக்கும். மத்தியகடல் பிரதேசத்திலும் மத்திய கிழக்குப் பிரதேசத்திலும் அன்டன் அமைதி செத்துவிடும்" என்றுர்.

பயங்கரவாதச் செயல்களை லிபியா எதிர்க்கிறது ஆயினும் அண்மையில் ரோமிலும் வியன்னுவிலும் பாலஸ்தீனியர்களினுல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பயங்கரவாதச் செயல்களல்ல. இழந்த தமது பூமியை மீட்கும் நியாமான, புனிதமான போராட்டத்தின் ஒரு நடவடிக்கையேயாகும்" என்றும் அவர் கூறினுர்.

ரோமிலும் வியன்னுவிலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு லிபியாவே பொறுப்பென்று குற்றஞ் சாட்டியுள்ள அமெரிக்காவும் இஸ்ரேலும் லிபியாமீது ஆகாயத் தாக்குதல் நடத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் இவ்வேளையிலேயே லிபியத் தலைவர் இவ் எச்சரிக்கையை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (செ)

## பங்களாதேஷிலும் அரசியல்தடைஉத்தரவுநீக்கம்

(டாக்கா)

பங்களாதேஷில்கடந்தபத்து மாதங்களாக தடை செய்யப்பட்டிருந்த அரசியல் நடவடிக்கைகள் புத்தாண்டு முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

அரசாங்கம் இத்தடை உத்தரவை நீக்கியதை அடுத்து, நேற்று இரு எதிர்க்கட்சிகள் நடத்திய மூன்று கூட்டங்களில் லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை பங்களாதேஷில் வேலைநிறுத்தம் மேற்கொண்டிருந்த வைத்தியா, பொறியியலாளர் உட்பட சுமார் 40,000 அரசாங்க ஊழியர்களின் தொழிற் சங்க அலுவலகம் நேற்று பொலிஸாரினுல் முற்றுகை யிடப்பட்டது,

டாக்கா பொறியியல் கழகத்தில் அமைந்திருந்த இவ் வலுவலகத்தில் இருந்த சுமார் நூறு பொறியியலாளரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கூடிய வேதனம் கோரி இவ் வூழியர்கள் கடந்த இருவாரங்களாக வேலை நிறுத்தம் செய்திருப்பதும் இதன் விளைவாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்த 25 நோயாளிகள் மரணமடைந்ததும் தெரிந்ததே! (செ)

## "புத்தாண்டில் அமைதியும் சமாதானமும் நிலவட்டும்!"

### வல்லரசுத்தலைவர்கள் புத்தாண்டு செய்தி

(வாஷிங்டன்)

மலர்ந்துள்ள புத்தாண்டு, உலக மக்களுக்கு அமைதியும் சமாதானமும் நிறைந்ததாக இருக்க வேண்டு மென சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு மிக்கேல் கோர்பச்சேவ், அமெரிக்க ஜனுதிபதி திரு. றேகனும் புத்தாண்டுச் செய்தியில் விடுத்துள்ளனர்.

இரு தலைவர்களும் தமது எதிர்நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

சோவியத் தலைவர் திரு. கோபச்சேவின் உரை வாஷிங்டனில் ஒளிபரப்பப்பட்டது. அவர் தமது உரையில், "86 ம் ஆண்டு சமாதான ஆண்டாக மிளிர வேண்டும். அண்மையில் நடந்த ஜெனிவாப் பேச்சுவார்த்தைகள் உலக சமாதான முயற்சியில் ஒரு புதிய அத்தியாயமாகும். எமது இரு நாடுகளும் அணு ஆயுத யுதத மொன்றில் ஈடுடக் கூடாது அது முழு மனித குலத்துக்குமே அழிவை விளைவிக்கும்' மலர்ந்தள்ள இப் புத்தாண்டில் அமெரிக்க மக்கள் நற்சுகத்துடனும், அமைதியுடனும் வாழ என் வாழ்த்துக்கள்" என்றுர்.

ஜனுதிபதி றேகனின் உரை மாஸ்கோவில் ஒளிபரப்பப்பட்டது. அவர் தமது உரையில் "இப் புத்தாண்டில் உலகில் யுத்தம் ஒன்று மூளாதிருக்க நாம் அனைவரும் உழைக்க வேண்டும். அமெரிக்க மக்கள் ஒருபோதும் சோவியத்துக்கு எதிரானவர்களல்ல" என்றுர். (செ)

### 14 கைதிகள் தப்பினர்

(பிரெஸ்ஸல்ஸ்)

பெல்ஜிய சிறைச்சாலை ஒன்றில் இருந்து பதினுன்கு கைதிகள் புத்தாண்டு தினத்தன்று தப்பிச் சென்றுள்ளனர்.

தென் கிழக்கு பெல்ஜியத்தில் உள்ளசிறைக்கூடம் ஒன்றில் இருந்தே இவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

புத்தாண்டைக் கொண்டாடும் முகமாக அளிக்கப்பட்ட விசட மாலை உணவை உண்டபின்னர் இவர்களில் மூவர் அங்கிருந்த சிறைக்காவலர்களை தாக்கி அவர்களிடமிருந்த சாவிகளின் உதவியினுல் மற்றையோரையும்கூட்டி தப்பிச் சென்றுள்ளனர்.

இப் பதினுன்கு பேரில் ஒருவர் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு இருபது வருட (ஆயுட்) சிறைத் தண்டனை அனுபவித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## ஆலய உற்சவம்

[இறுப்பிட்டி]

புங்குடுதீவு - பெருங்காடு மூத்தநயினுர் புலம் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 15ம் திகதி கொடியேற்றத்திருவிழாவுடன் ஆரம்பமகித் தொடர்ந்து 10 தினங்கள் சிறப்பாக நடைபெறும்.

### மணிவாக்கு

யார்க்கும் எளியனாய் யார்க்கும் வலியனாய் யார்க்கும் அன்பனாய் யார்க்கும் இனியனாய் வாழ்ந்திட விரும்பினேன்.

— பாரதியார்

## நமது நோக்கு

# நல்லதொரு சூழ்நிலை உருவாகியுள்ளது!

பதவியிலிருந்தபோது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் குடியுரிமைகள் பறிக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதமரும் சுதந்திரக் கட்சித் தலைவருமான திருமதி பண்டாரநாயக்காவுக்கு ஜனாதிபதியின் விசேட பிரகடனத்தின் மூலம் மீண்டும் அந்த உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த அரசு பதவிக்கு வந்த கையோடு நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தீர்ப்பின்படி இந்த உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தபோதிலும் திருமதி பண்டாரநாயக்கா ஒருகாலத்தில் மக்களின் அபரிமிதமான ஆதரவைப் பெற்றிருந்தவர் என்றஅடிப்படையில் ஜனாதிபதி தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி அவருக்கு அப்பொழுதே மன்னிப்புஅளித்திருக்கலாம். அவ்வாறு செய்திருப்பின் இந்த அரசாங்கத்தின் மதிப்பும் மரியாதையும் பன்மடங்கு அதிகரித்திருக்கும். மாறாக திருமதி பண்டாரநாயக்கா தமது தவறுகளை உணர்ந்து மன்னிப்புக் கோரினால் மாத்திரமே உரிமைகளை மீண்டும் தரலாம் என்றவகையில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறிவந்தார். ஆணைக்குழுவின் தீர்ப்பின்படி திருமதி பண்டாரநாயக்கா தாம் இழந்த உரிமைகளைத் திரும்பப் பெறுவதற்கு இன்னும் சில மாதங்களே இருக்கும் நிலையில் பறித்த உரிமைகளைத் திரும்பக் கொடுப்பதற்கு அரசு முடிவுசெய்திருப்பதானது அரசியல் வட்டாரங்களில் பல்வேறுவிதமான சந்தேகங்களைக் கிளம்பியுள்ளது.

தமிழருக்கு பிரச்னை உண்டு, என்பதை ஏற்றுக்கொண்டு, அதனை சகல அரசியல் கட்சிகளையும் கொண்ட மாநாடொன்றைக் கூட்டி அதன்மூலம் தீர்த்துவைப்பதற்கு வாக்குறுதியளித்துவிட்டு பதவிக்கு வந்த இந்த அரசாங்கம், தன்னிச்சையாக சில பல காரியங்களில் ஈடுபட்டு தமிழர் பிரச்னையைச் சிக்கலாக்கிக்கொண்டது. சுதந்திரக் கட்சி அரசு பதவியில் இருந்த காலத்திலேயே தலைதூக்க ஆரம்பித்திருந்த தமிழ் இளைஞர் தீவிரவாதத்தை சரியானமுறையில் விஞ்ஞானபூர்வமாக அணுகாமல், அடக்குமுறைச் சட்டங்களைத்தீவிரப்படுத்தி இன உணர்வுகொண்ட ராணுவத்தையும், இதர படைகளையும் கொண்டு தமிழ் இளைஞர்களின் தீவிரவாதத்தையும் அழித்தொழிக்க முற்பட்டு நாட்டை இன்றைய நிலைக்குக் கொண்டுவந்து வைத்துள்ளது.

இந்திய அரசின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த வட்டமேசைமாநாட்டின்போதே திருமதி பண்டாரநாயக்காவின் குடி உரிமைகள் வழங்கப்பட்டிருக்கவேண்டும். அந்த மாகாநாட்டின் மூலம் நல்ல ஒரு தீர்வினை உருவாக்கிக் கொள்ள அது உதவியிருக்கலாம்.

இனப்பிரச்னைக்கு பிரிவினை தவிர்ந்த மாற்றுத் திட்டம் ஒன்றினை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முன்வைத்திருப்பதும் அதனை ஏனையதமிழ்க் குழுக்கள் ஏற்காவிடினும் எதிர்ப்புகாட்டாமல்இருப்பதும் புதியகோணத்தில் பிரச்னையை விரைவாக அணுகி ஒரு நல்ல தீர்வினை உருவாக்க அரசுக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பமாகும்.

இதனையும் வெட்டி வீருப்புடன் கைநழுவவிடுவதாயின் மீட்சியே இல்லை. மேலும் பிரச்னையைத் தொடர்ந்தும் இழுத்தடித்து ராணுவ ரீதியிலேயே தீர்வுகண்டுவிடலாம் என்று நினைப்பதாயின் அதுவெறும் கனவாக முடியும் என்பது ஒருபுறமிருக்க, அவ்வாறு இழுத்தடிப்பதற்கு இந்திய அரசு இனிமேலும் இடம் தரமாட்டாது என்பதும் தெளிவு.

புத்தாண்டு பரிசாக திருமதி பண்டாரநாயக்காவுக்கு குடியுரிமையை மீளளித்துள்ளஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜயவர்த்தனபுதிய ஆண்டில் தமிழ்த்தீவிரவாதிகளை முற்றாக அழித்தொழிக்கும் ஆண்டாக ஏற்கனவே பிரகடனப்படுத்தியிருக்கிறார் என்பதையும் எவரும் மறந்துவிடலாகாது.

தமிழ் இளைஞர்களின் சில நடைமுறைகளை தமிழ் மக்கள் ஏற்காமலிருக்கலாம், ஆனால் தமிழர் சமுதாயத்தின் இன்றைய அபிலாஷைகளை அவர்களின் உணர்வுகளை இளைஞர்கள் பிரதிபலிக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்கவியலாது. எனவேமுழுஇளைஞர்சமுதாயத்தையும் அழித்துஒழித்துவிட்டாலும்கூட அந்தச் சமுதாயத்தின் உணர்வு அழியப்போவதில்லை. அது சந்ததி சந்ததியாக வளர்ந்து கொண்டேயிருக்கும்.

தமிழருக்கு இழைக்கப்பட்டுவிட்ட அநீதியை அழித்தொழித்து நீதியை நிலைநாட்டும்படி அவர்கள் கேட்கிறார்கள். அதுவே இன்றைய பிரச்னையின் மூலவேர் எனலாம்.

எதுவாயினும், தமிழர் பிரச்னைக்கு ஒரு சுமுகமான தீர்வினைக் காண்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி முன் வைத்துள்ள மாற்றுத் திட்டத்தினை அடிப்படையாக வைத்து புதியமுயற்சி ஒன்றினை மேற்கொள்வதாயின் அரசு நாட்டின் ஏனைய கட்சிகளின் பங்குளிப்பினையும் எதிர்பார்ப்பது இயற்கை. அந்த வகையில் திருமதி பண்டாரநாயக்காவின் குடி உரிமைகள் மீளளிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது.

அடுத்துவரக்கூடிய தேர்தலைக் கருத்தில் கொள்ளாமல் அனைவரும்கூடி நல்லதொரு தீர்வினை உருவாக்க முடியுமானால் இந்த நாடு மீண்டும் பழையபடி கிழக்கின் அமைதித் துவீபமாகத் திகழமுடியும்.

இல்லையெனில்......!

## இன்று அன்னையின் ஜயந்தி தினம்

# உலகுக்கு ஒளி ஊட்டும் தூய அன்னை ஸ்ரீசாரததேவி

### சுவாமி சித்ரூபானந்தா

அப்பொழுது வசந்தகாலம் அன்னை ஸ்ரீ சாரததேவிக்கு அந்தச்சமயம் வயது இருபது இருக்கும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அன்னையை அழைத்து அண்மையில் உள்ள பூந்தோட்டத்தைக் காட்டி, ''அங்கேஉள்ள அறையில்வாழ்ந்து வரும்படியும், தியானத்திலும், ஜபத்திலும் காலத்தைக்கழிக்கும் படியும் கூறினார். காலகதியில் உம்முடைய வாசல் கதவுதிறக்கப்படும். அன்றுபலர்உம்மைச் சூழ்ந்து அம்மா அம்மா என்று அழைத்து தங்கள் வாழ்வின் துயரத்தை இறக்கிவைப்பர் ஆறுதலும் அடைவர்'' என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

தற்கால சமுதாயத்தின் நடுப்பகுதியில் வாழ்ந்து வரும் எமக்கு இச்செய்கையைப்பார்க்கும் பொழுது ஆச்சரியமாக இருக்கிறதல்லவா! ஒரு கன்னிப் பெண் உலக போகங்களை விடுதது ஸ்ரீ ராமகிருஷ்ணர் அன்புடன் இயம்பிய சொற்களுக்கு மனதார கட்டுபட்டு தனது வாழ்வைத் துறந்தாள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தனது மனையாள் என்று கருத்தில் கொண்டு கட்டளையிடவில்லை. உலகத்தின் பெரு நன்மையின் பொருட்டு ஒருவேண்டுகோளை விடுத்தார். ஆத்மீக வாழ்வில் கீழ்ப்படிதல் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகின்றது. கீழ்படிவு என்றால் அடிமைத்தனம் அல்லது சுயபுத்தியை இழப்பதல்ல என்பதாகும்.

அன்னை பிறத்து இன்றுஒரு நூற்றாண்டு கடந்துவிட்டது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூற்று நிதர்சனமாகிவிட்டது. இன்று உலகமக்கள் அனைவரும் இவரின் வாழ்விலும் போதனையிலும் கவரப் பெற்று சாந்தி அடைகின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் நேர் சீடரான ஸ்ரீமத் சுவாமி அபேதாநக் அன்னை ஸ்ரீ சாராத தேவிக்கு ஒரு ஸ்தோத்ரம் இயற்றியுள்ளார். ஓர் இடத்தில்

''அன்னையின் சரித்திரம்
தூய்மையானது,
இவளுடைய வாழ்வு தூய்
மையானது,
இவளுடைய சொருபம் தூய்
மையனது,
இப்படிப்பட்ட தூய்மை
யானவளிடம்
மீண்டும் மீண்டும் அடைக்
கலம் புகுகின்றேன்.''

எனக் குறிப்பிடுகின்றார்.

அன்னையின் வர்ழ்வில் அன்புக்கு இலக்கணமாக பல நிகழ்ச்சிகள் உண்டு. அன்னை வாழ்ந்த காலத்தில் ஒரு ஆஸ்ரமத்தில் குற்றம் புரிந்த வேலையாளை சுவாமி விவேகானந்தர் நீக்கிவிட்டார். இவ்வேலையாள் அன்னையிடம் தனது தவற்றையும் குடும்ப வாழ்க்கையின் இன்னலையும் எடுத்துச் சொன்னார். உடனே அங்கிருந்த சுவாமி பிரேமானந்தரை இவ்வேலையாளை மீண்டும் வேலையில் சேர்க்கும் படியும் அங்கு கூட்டிச்செல்லுமாறும் பணித்தார். சுவாமி விவேகானந்தர் வேலையாள் ஆச்சிரம எல்லைக்குள் சுவாமி பிரேமானந்தருடன் வருவதைப் பார்த்ததும் கோபம் கொண்டார். நடந்தவற்றைக் கேட்டதும், அன்னையின் கூற்றுக்கு எதிர்வார்த்தை கூறாமல் வேலையில் அமர்த்தினார். ''ஒரு குழந்தை அழுக்கில் விழுந்து விட்டது தாயானவள் அக்குழந்தையை வாரி எடுத்து, நீராட்டி ஆடைகளை அணிவிப்பாள். ஆகவே எனது கடமை அதுதான்', என்பாள் அன்னை.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் 1886-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி இவ்வுலகை நீத்து மகா சமாதி அடைந்தார். அன்னைக்கு அப்பொழுது வயது 33. 67 ஆண்டுகள் பூவுலகில் வாழ்ந்த அன்னையார் சந்நியாசி சீடர்களுக்கு மட்டுமல்ல யாவருக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்தார். சுவாமி விவேகானந்தர் 1894 ம் ஆண்டு சுவாமி சிவானந்தருக்கு எழுதிய கடிதத்தில் ''நீங்கள் இன்னும் அன்னையின் மகிமையை உணரவில்லை. காலப்போக்கில் அறிவீர்கள். சக்தியின் ஆற்றல் அல்லாமல் வாழ்வு சூன்யம் தான். இன்று மேலைநாடுகள் வளர்ச்சியடைவதற்கும், நாம் பின்தங்கிவிட்டதற்கும் காரணம் சக்திக்குரிய இடம் அளிக்கவில்லை என்பதேயாகும். ஆகவே அன்னை ஸ்ரீசாரதாதேவியை மையமாக வைத்து ஒரு புனித சமுதாயம் உருவாகட்டும்'' என்றார்.

தேவியின் ஆத்மசக்தி அபாரமானது என்பது ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நம்பிக்கை ''அவள் சரஸ்வதிதேவியின் அவதாரமாவாள். பிறருக்கு ஞானம் அளிக்கவே அவள் பிறந்திருக்கிறாள்'' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது மனைவியைப் பற்றி சீஷ்யையொருத்தியிடம் கூறினார். பெண்மை பரிபூரணமடைவது தாய்நிலையில் தான். தியாகத்தை அடிப்படையாகக் கொண்டது தாய்நிலை. அன்னை சாரதாதேவியின் வாழ்வு தன்னிடம் வந்த சகல

(5-ம் பக்கம் பார்க்க)

## வெள்ளிச் சிந்தனை

### திருப்பள்ளி எழுச்சி

மார்கழி மாதம் முழுவதும் ஆலயங்களில் அதிகாலையிலே பூசை நடப்பதும் பெரும்பாலான ஆலயங்களில் திருப்பள்ளி எழுச்சி ஓதுவதும் வழக்கமாகும். ஆறுகாலப் பூசை நடைபெறும் திருக்கேதீச்சரம் போன்ற ஆலயங்களில் தினமும் அதிகாலையில் நடைபெறும் பூசையில் திருப்பள்ளி எழுச்சி ஓதப்படும்.

தைமாதம் முதல் மார்கழி மாதம் முடிய உள்ள ஒரு வருடத்தைத் தேவர்களுக்கு உரிய ஒரு நாளாகக் கணிக்கும்போது மார்கழி மாதம் அதிகாலைவேளையாக அமையும். தேவர்களுக்கு அதிகாலை வேளையில் நமக்கும் வரும் அதிகாலை வேளை வலிமையான சிறப்புடையது என்றே மார்கழி மாதத்தில் வரும் அதிகாலை போற்றப்படுகின்றது. 'மார்கழி மாதத்தில் வரும் அத்தனை அதிகாலைப் போதிலும் இறைவழிபாட்டில் ஈடுபட்டால் வருடம் 365 நாளும் காலை வழிபாடு செய்யும் பெருமை கிடைக்கும்' என்ற மரபான-பிரமாண வாக்கியத்தைப் பேணிச் சைவசமயிகள் ஆலய வழிபாட்டில் ஈடுபடவேண்டும்.

ஆலய வழிபாடு - ஆலயத்தில் இறைவனுக்குச் செய்யப்படும் அபிஷேகம் நிவேதனம் ஆகிய கிரியைகளால் இறைவன் நன்மையடைவாரா? இவை இல்லாவிட்டால் இறைவன் துன்புறுவாரா? என்பன போலச்சிந்திப்பதும், திருப்பள்ளி எழுச்சி பாடாவிட்டால் இறைவன் எழுந்திருக்காரா? இறைவன் நித்திரை கொள்ளுவாரா? என்று தருக்கிப்பதெல்லாம் சிவாகம விளக்கம் - ஆன்ம இயல்பு என்பன பற்றிய அறியாமையால் ஏற்படும் விபரீதங்களேயாகும்.

மனிதரின் அகவளர்ச்சிக்கும் அகவழிபாட்டுக்கும் ஆன்ம விழிப்புக்கும் உதவும் அருஞ் செயல்களாகவே நம்சமயக் கிரியைகளில் பெரும்பாலான கிரியைகளும் ஆலயக்கிரியைகளும் உள்ளன.

திருப்பள்ளி எழுச்சிப்பதிகத்தைத் தினமும் ஓதுவதால் திரோதானசக்தி திருவருட்சக்தியாக மாறும். திரோதான சத்தி சுத்தப்படுவதால் ஆணவத் தடிப்பால் ஏற்படும் மயக்கம் நீங்கும் நிலையும், சிவஞானம் ஆகிய விளக்கமேற்பட இன்புறும் நிலையும் உருவாகும். எனவே எம்முயிர்க்கு உயிராக இருக்கும் இறைவனை நாம் உணர முடியாதிருக்கும் நிலை நீங்கவே நம் ஆன்மாவினுள் உள்ள தெய்வீகம் வெளிப்படவே ஆலயத்தில் திருப்பள்ளி எழுச்சி பாடப்படுகின்றதென உணர வேண்டும்.

மார்கழி மாதத்தில் மட்டுமன்றித் தினமும் அதிகாலையில் ஒவ்வருவரும் நித்திரை விட்டெழுந்து இயன்றளவு புறத் தூய்மையடைந்த பின் ஆலயத்திலோ தாம் இருக்கும் இடத்திலோ திருப்பள்ளியெழுச்சியை ஓதுவது பல நன்மைகளுக்கு வித்திடுவதாய் அமையும்.

திருப்பள்ளியெழுச்சியில் வருகின்ற மாணிக்கவாசகங்களுள் 'என் வாழ் முதலாகிய பொருளே, 'யாவரும் அறிவரியாய் எமக் கெளியாய்' 'அருள் நிதிதரவரும் ஆநந்த மலையே' முதலிய பல தொடர்கள் நாம் தினம் தினம் சிந்திக்க வேண்டிய பெருமை, அருமை, எளிமை உடையனவாகும்.

அது பழச் சுவையென
அமுதென அறிதற்கு
அரிதென எளிதென
அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவன்
அவன்
எனவே எங்களையாண்டு
கொண்டு இங்கெழுந்தருளும்
மதுவளர் பொழிற்றிருவுத்
தரகோச
மங்கையுள்ளாய் திருப்
பெருந்துறை மன்னா
எது வெமைப் பணிகொள்
ளுமாறு
அது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்
தருளாயே.

மாணிக்கவாசகர்.

அருளாளன்

## யாழ்தேவி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேவி' பரந்தன் ரயில் நிலையத்தில் நின்று விட்டதால் யாழ். ரயில்நிலையத்திலிருந்து மற்றொரு என்ஜின் பரந்தனுக்குச் சென்றது.

பயணம் செய்வதற்காக யாழ் ரயில் நிலயத்திற்கு நேற்று நண்பகல் வந்த பிரயாணிகள் யாவரும் நேற்று மாலைவரை ரயில் நிலையத்தில் காத்திருந்து வீடு திரும்பினர்.

நேற்றிரவு 'யாழ்தேவி' யாழ் ரயில் நிலையம் வந்து சேர்ந்தது.


### கடைசி நேர வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

2 பரப்புக் காணியும், வீடும் சகல வசதிகளுடனும் கோப்பாய் தெற்கு பருத்தித்துறை வீதியில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- திருமதி தனம் தர்மலிங்கம், கோப்பாய்.

(A 17)



வலி கிழக்கு
தெ. ப. ப. நோ. கூ. சங்கம்
நீர்வேலி

### கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தில் பழைய லொறி பொடி, லொறிரயர், சீமெந்து குழைக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம், நெசவுதறி என்பன கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. இதற்கான கேள்வி விண்ணப்பப்படிவம் ஒன்று ரூபா 2/- செலுத்தி சங்கத்தின் தலைமைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்

கேள்வி விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ, 'பொதுமுகாமையாளர்', வலி கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு எதிர்வரும் 16-01-86 வியாழக்கிழமைக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். பொருட்களை தலைமைக் கந்தோரில் கடமை நேரங்களில் பார்வையிடலாம்.

**பொது முகாமையாளர்,**
நீர்வேலி,
1986-01-01 (A 14)



**எம்பயர்**
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30,
ரஜனி - ரதி
**"கழுகு"**



**லிடோ சினிமா**
10-30, 2-30, 4-30, 6-30
ஜெய்சங்கர் - லட்சுமி
முத்துராமன்
**கண்ணன் வருவான்**
(புதிய பிரதி)



ஜனவரி 7 மட்டும்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
பயங்கர கராட்டி குஞ்பூ சண்டைக் காட்சிகள் நிறைந்த கொழும்பில் பல மாதங்கள் ஓடிய
TEN BROTHERS OF SHALOIN
[யாழ். நகரில் முதன்முதலாக காண்பிக்கப்படுகிறது]


## கண்காணிப்பு குழுவினர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியிலும், மற்றும் இடங்களிலும் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திப்பார்கள்.

காலை 10 மணிக்கு அசோகா ஹோட்டலில் பிரஜைகள் குழுவினரைச் சந்திப்பர்.

பொன்னாலையில் டிசம்பர் 12ம் திகதி நடந்த சம்பவம் தொடர்பாக, சுழிபுரம் பிரஜைகள் குழுத்தலைவர் திரு.வி. கிருஷ்ணசாமி மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் சந்திப்பார்கள்.

பொலிகண்டி, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு பகுதியில் 85 டிசம்பரில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு இணைச்செயலாளர் திரு. எஸ் குமாரசாமி மற்றும் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திப்பார்கள்,

மடத்துவளவு தோப்புக்காடு பகுதியில் டிசம்பர் 23ல் நடந்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் திரு' எஸ். செல்வராசா தலைமையில் சந்திப்பார்கள்,

பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் சந்திப்பு ஆரம்பமாகும். வசாவிளானில் டிசம்பர் 21ல்நடந்த சம்பவம் தொடர்பாக மயிலிட்டி வடக்கு பிரஜைகள்குழு தலைவர் திரு. எஸ் சண்முலிங்கமும் பாதிக்கப்பட்டவர்களும் சந்திப்பார்கள்.

சுதுமலையில் டிசம்பர் 21ல் நடந்த சம்பவம் தொடர்பாக சுதுமலை பிரஜை ள் குழுத் தலைவரும், பாதிக்கப்பட்டவர்களும் சந்திப்பர்.

அரியாலையில் டிசம்பர் 20-ல் நடந்த சம்பவம் தொடர்பாக அரியாலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு, எஸ். மோகனதாஸ், மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் சந்திப்பர்.

ஞாயிற்றுக்கிழமை ஐந்தாம் திகதி நண்பகல், யாழ்ப்பாண பகுதியில் சம்பவம் நடந்த இடங்களை கண்காணிப்பு குழுவினர் நேரில் சென்றுபார்வையிடுவர். மாலை யாழ்நகர் திரும்புவர். 6ம் தேதி திங்கள் காலை கொழும்பு திரும்புவர்.

(க)


### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்**

வளலாய் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லமுத்து வேலுப்பிள்ளை என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்
மரணசாதன / நியாயாதிக்கம் } ரி 253
வேலுப்பிள்ளை செல்வநாயகம்
பிள்ளையார் கோவிலடி
வளலாய், அச்சுவேலி
எதிராக மனுதார்

1. வேலுப்பிள்ளை கைம்பெண் ஆச்சிமுத்து
2. வேலுப்பிள்ளை மகள் வசந்தநாயகி
3. வேலுப்பிள்ளை மகள் சுவந்தினி
எல்லோரும்பிள்ளையார் கோவிலடி வளலாய், அச்சுவேலி,

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986-ம் ஆண்டு தை மாதம் 15-ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறுஇத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்

1985-ம் ஆண்டு மார்கழி மாதம் 30-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**
பதிவாளர்

வரைவு
**மு. யோககுமார்**
மனுதாரின் சட்டத்தரணி.
(C 11)


## 9 ஆயுதப்படையினர்...

[1-ம பக்கத் தொடர்ச்சி]

வன் வெளியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஆயுதப்படையினர் அவ்விடத்துக்கு வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அநாதையான வயோதிபர் ஒருவர் பலியானதாகவும் மற்றும் வீட்டிலிருந்த ஒரு பெண்ணும், ஆணும் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மற்றொரு சம்பவம்

களுவாஞ்சிக்குடியில் அதிவேகமாகச் சென்ற ஆயுதப்டையினரின் வ கனம் மின் சாரக்கம்பத்துடன் மோதிய தால்ஏழு வீரர்கள் படுகாயமடைந்தனர்.

இவ்விபத்து இடம்பெற்ற பகுதிக்கு ஹெலிகொப்டர் உடனடியாக அழைக்கப்பட்டு அதன் மூலம் காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். (ம)

## உலகுக்கு ..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கும் தாயாகவே இருந்து பணிபுரிந்தார்.

ஆகவே தூய்மைக்கும், கருணைக்கும் உறைவிடமான அன்னையின் ஜயந்தி தினமாகிய இன்று இவரைப் போற்றிப் பரவி உய்தி பெறுவோமாக.

## நிலாவெளி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களும், நூற்றுக்குமதிகமான பயிற்சி சம்பந்தமான புகைப் படங்களும் இந்த முகாமில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன என்றும் அரசு தரப்பில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

இம்முகாமில் தீவிரவாதிகளின் மனைவிமார் எனக்கருதப்படும் இரு பெண்களின் புகைப்படங்களும் பாதுகாப்புப்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் படையினர் இம்முகாமைத் தாக்கிய பொழுது ஐந்து தீவிரவாதிகள் இருந்தார்களென்றும் இருவர் தப்பி ஓடிவிட்டதாகவும் மூவர் பாதுகாப்புப் படையினரால் சுடப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(து)


யாழ். செயலக
நலன்புரிச் சங்கம்
சிற்றுண்டிச்சாலை
நடத்துவதற்கான

### கேள்விப்பத்திரம்

யாழ் செயலக போசனசாலையை 01-02-1986 தொடக்கம் 31-01-87 வரை நடாத்துவதற்கான கேள்விப்பத்திரங்கள் 15-01-86 பிற்பகல் 2-30 மணிவரை, செயலாளர், நலன்புரிச்சங்கம், செயலகம், யாழ்ப்பாணம் என்பவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் மேற்கூறிய விலாசத்தாரிடம் ரூபா 25/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் கேள்வி சாதகமாக அமையாதபட்சத்தில் ரூபா 25/- மீண்டும் பெற்றுக்கொள்ளலாம்.

**வி. எஸ். கனகரத்தினம்,**
கௌ. பொதுச்செயலாளர்.
யாழ். செயலக
நலன்புரிச்சங்கம்.
செயலகம்,
யாழ்ப்பாணம்.
30-12-1985 (2742)


## சிறிமாவோ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமன்; இது எப்பவோ வழங்கப் ட்டிருக்க வேண்டுமென்றும் அவரின் குடியுரிமையைப் பறித்தது அநீதி என்றும் கூறினர்.

## உருத்திரபுரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாலயம் சமீபமாக இடம் பெற்றது.

சரமாரியான குண்டுச் சத்தங்கள் அப்பகுதியில் கேட்டன. இராணுவம் சுட்டதில் றெபேர்ட் அருள்தாசன் என்பவர்பலி பலியானர்.

இராணுவத்தினர் சென்ற பஸ்ஸின் சாரதி எம். குலசேகரன், நடத்துநர் செல்லத்துரை ஆகியோரும் இச்சம்பவத்தின் போது படுகாயமடைந்தனர் வேறும் பலர் காயமடைந்தனர்

இதே வேளை இயக்கத்தினர் போல் வேடம்போட்டு கிளிநொச்சியில் சிலர் நடமாடுவதாகவும் புகார் தெரிவிக்கப் படுகிறது.

தொடரும் தேடுதல் வேட்டைகளால் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

அம்பாள் குளம் பகுதியில் பலத்த தேடுதல் வேட்டைகளும், வட்டக்கச்சியில் இராணுவ அச்சுறுத்தல்களும் இடம் பெற்றுள்ளது.

ஆகாயத்தில் ஹெலிகொப்டர் தாக்குதலும், தரையில் சாதாரண உடையிலான தாக்குதலும் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தொடர்ந்து நடைபெறுகிறது. இச்சம்பவங்களையிட்டு கிளிநொச்சி பிரஜைகள்குழு செயலாளர் சட்டத்தரணி ரி. ஸ்ரீஸ்கந்தராசா கண்காணிப்பு குழுவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

## டில்லி வருமாறு---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை அரசும் விரும்புவதாக அறியப்படுகிறது.

பேச்சுவார்த்தைகளை கொழும்பில்நடத்துவதற்கு கூட்டணி கடைசிவரை முன்வராது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

திரு. ரி. பி. இலங்கரத்தின திருமதி சிறிமாவுக்கு குடியுரிமை வழங்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைவதாகக் கூறினர்.

கூட்டணியைச்சேர்ந்த கலாநிதி நீலன் திருச்செல்வம்; நீதி மீண்டும் நிலைநிறுத்தப்பட்டுள்ளதென்றும், அவர் அத்தனகல எம். பி.யாக நியமிக்சப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், குடியுரிமை பறிக்கப்பட்டதை கூட்டணி முழுமூச்சாக எதிர்த்தது என்றும் கூறினர்.

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு குமார் பொன்னம்பலம்; ''நீதிவழங்கப்பட்டபோதிலும் இது காலம் கடந்த செயல் சுயநலத்துடன் செய்திருப்பதாகத் தெரிகிறது. இதன் பின்னணியில் பெரும் சக்தி இருப்பதாக உணர்கின்றேன்'' என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

## பொதுத்தேர்தல்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது: ''தமிழ்த்தீவிரவாதக் குழுக்களுக்குள் மோதல்கள் உண்டு. பிரபாகரனும், உமாமகேஸ்வரனும் கீரியும், பாம்பும் போல் இருக்கிறார்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி. வடக்கு, கிழக்கு இணைந்த பிரதேசம் கேட்கிறது. இந்த நிலையில் யாருடன்பேச்சுவார்த்தை நடத்தமுடியும்?

''தமிழ்த் தீவிரவாதிகள் ஆயுதங்களை கீழே போட்டு, தமிழ்மக்கள் அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க அனுமதிக்க வேண்டும். பொதுத்தேர்தலைநடத்த ஏற்ற சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

''வடக்கு கிழக்கில் தேர்தல் நடத்தினால் மக்கள்தமக்கு எது சரியென்பதை தீர்மானித்து பிரதிநிதிகளை தெரிவுசெய்வார்கள். அப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி பிரச்னையைத் தீர்க்கலாம். இதனை அரசுக்கு தெரிவித்துள்ளோம். பொதுக்கூட்டங்கள்மூலமும், பொதுத்தேர்தலை நடத்துமாறு வலியுறுத்திவருகின்றோம். இலங்கையில் பொதுத்தேர்தல் நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளோம். (இ-க)


# பிஸ்கால் ஏல விற்பனவு

## விளம்பரம்

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்**

வழக்கு இல: காணி/2252

ஆசை வேதநாயகமும் பெண்
அன்னம்மாவும், அம்மன் கோவிலடி
கோப்பாய் வடக்கு.

வழக்காளிகள்

எதிரி

1. சின்னவன் பொன்னன் கைம்பெண் இலட்சுமி
2. பொன்னன் செல்லத்துரை (தகப்பனின் ஆஸ்திக்கு தத்துவம் பூண்டவர்)

இருவரும் நாக்கனுவத்தை, அளவெட்டி.

எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் காணி/2252 இலக்க வழக்கிலே எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணியை 1986ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

நில பர. 3 அல்லது அதன் பெறுமதி ரூபா 15000/-மும் வீடுகட்டிக்கொள்ளப்பொருந்திய ரூபா 5000/-மும் வீட்டுத் தளபாடம் வாங்கப் பொருந்திய ரூபா 2000/-மும் மொத்தம் 22000/-ஐயும் அத்துடன் செலவுபணம் ரூபா 6973-40யும் அறவிடவேண்டும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் பெரும் பிரிவு வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை வியங்கபதிராயன் வளவு நில பர, 4 குளி $10\frac{1}{2}$. இதில் மேற்குப் பக்கமாக நிலப்பரப்பு ஒன்றரையும் (நில. பர. $1\frac{1}{2}$) வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு 2ம் எதிராளிக்குரிய ஆதனம் வடக்கு முருகன் பொன்னனின் ஆதனம். மேற்கு றோட்டு தெற்கு 2ம் ஆதனம். இவ்வெல்லைப்படி இது முழுவதும் கிழக்கெல்லைக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் ஆறில் ஒரு பங்கும் வழிவாய்க்காற்பாவிப்புரித்தும்.

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**
பிஸ்கால்/பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

(C 14)

## விக்னு டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

(கலை, வர்த்தக பிரிவுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**87 A/L புதிய 4-வது பிரிவு**

ஆரம்பம்: 5-1-86

காலை 8-00 மணி

முக்கிய குறிப்பு:

குறிப்பிட்ட தொகையான மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும்.

4-1-86க்கு முன் அனுமதி பெறவேண்டும்.


# 'சலரோகநோயைகட்டுப்படுத்தி சுகதேகிகளாக வாழலாம்'

(மாவிட்டபுரம்)

''உலகில் கோடிக்கணக்கானவர்கள் சலரோக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந் நோய் கண்டவர்கள் நோயை முற்று முழுதாக மாற்ற முடியாது, அந்நோயை கட்டுப்படுத்தி சுகதேகிகளாக வாழலாம்.''

இவ்வாறு மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்தினரால் நடாத்தப்பட்ட நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர் திரு. என். சரவணபவானந்தன் கூறினர்.

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகமும், யாழ். மருத்துவ பீடமும் இணைந்து வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் நடாத்திய இக்கருத்தரங்கு ஆரம்பத்தில் நோயை இனங்காணும் வகையில் ஆய்வுப் பரிசோதனையும் இடம்பெற்றது.

லயன்ஸ் கழக தலைவர் திரு. ஏ. வி. சர்மா தலைமையில் நடந்த இக் கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

''இந் நோய் கண்டால் பல உறுப்புக்கள் பாதிக்கப்படலாம் ஆரம்பத்திலேயே வைத்திய சிகிச்சை பெறவேண்டும். கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தல் சுகதேகியாக வாழலாம். இந் நோய் பற்றிய அறிவை மக்களுக்கு ஊட்டும் வகையில் கிராமம் கிராமமாக இப்படியான கருத்தரங்குகளை நடத்தி வருகிறோம். மேலும் பல இடங்களிலும் நடாத்த உத்தேசித்துள்ளோம்'' என்றார்.

வைத்திய கலாநிதி திரு. எஸ். நாகநாதர் பேசுகையில் கூறியதாவது; ''பழமையான நோய் இது. இந்நோய் 4000 வருடங்களுக்குமுன் எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டது. பண்டையகால வரலாறுகளில்கூட இந்நோய்பற்றி உள்ளது. 17ம் நூற்றுண்டளவில் தான் சரியான முறையில் நோய் பற்றி அறிய முடிந்தது. இந் நோய் காண்பதற்கு களைப்பு, தாகம் நிறைகுறைதல், அடிக்கடி சிறுநீர் கழிதல் இருந்தால் வைத்திய ஆலோசனை பெற்று அதன்படி நடக்கவேண்டும். சிலருக்கு எந்தவித அறிகுறியும் இல்லாது இந்நோய் இருக்கலாம். அவர் வேறு ஒரு நோய்க்கு வைத்தியசாலை செல்லும்போது இந்நோய் இருப்பதுகண்டுபிடிக்கப்படலாம். ஆகவே சகலரும் இந்நோய் பற்றிகுணங்குறி கண்டால் வைத்திய ஆலோசனை பெறவேண்டும்'' என்றார்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை வைத்திய கலாநிதி வி. ஜெகப்பிரகாசன் பேசுகையில் கூறியதாவது:- ''இந்நோய் பற்றிய அறிகுறி தென்பட்டால் வெட்கப்படாமல் வைத்தியர்களிடம் தெரிவிக்கவேண்டும். வெட்கப்பட்டு இருந்தால் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்'' என்றார்.

பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன், வைத்திய கலாநிதி திருமதி ரி. சரவணபவானந்தன், ஆய்வுகூடப்பரிசோதகர் திரு. ரி. பாலசிங்கம் உட்பட பலர் உரையாற்றினர்கள். மாவை லயன்ஸ் கழக முன்னுள் தலைவர் திரு. மனோகரன், தற்போதைய செயலாளர் திரு. ஜெகதீசன், பொருளாளர் திரு. ஏ சண்முகநாதன் ஆகியோர் இக்கருத்தரங்குக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.


# இதோ! பெயார் பிரான்ட் இப்போது விசேஷ பக்கெட்டில் கிடைக்கிறது




குடும்பத்தினர் என்றும் விரும்பும் ஆடை செறிந்த பெயார் பிரான்ட், பாலின் சிறந்த சுவையை உங்களுக்கு அள்ளி வழங்குவதோடு, மிகவும் உபயோகமான 1986 கலண்டரும் மெட்றிக் மாற்றுமுறை அட்டவணையும் கொண்ட விசேஷ பக்கெட்டில் இப்போது கிடைக்கிறது. ஆமாம்! பெயார் பிரான்ட், குடும்பத்தினரின் சிறந்த தெரிவு. எவ்வேளையில் சமையலின்போது பாவனைக்குச் சௌகரியமானது. தேநீருடனோ கோப்பியுடனோ கலந்து அருந்த இலகுவானது. சுவைக்கச் சுவைக்க பாலின் சுவை குன்றாதது. சுருங்கக் கூறின், அனைவரும் விரும்பும் பாலின் உன்னத சுவை பெயார் பிரான்ட்.




உங்களுக்கு ஏற்ற,கையடக்கமான கலண்டரும் மெட்றிக் மாற்றுமுறை அட்டவணையும்

## பெயார் பிரான்ட்

பணத்திற்கு மிகச் சிறந்த பெறுமதி




விலை 400 கிறாம் ரூ. 25/50 250 கிறாம் ரூ. 16/90


## இன்றைய பலன்

மாதம்- மார்கழி
திகதி 19 (3-1-1986)
கிழமை- வெள்ளி
திதி- ஸப்தமி மு. ப வரை
நக்ஷத்திரம்- உத்தரம்
காலை 6, 40ன் மேல் அத்தம்

மேடம்: எதிர்பார்த்த விடயங்களில் தடைகள் ஏற்பட்டு வரும். தொழில் துறையில் விருத்திகுறையும். நண்பர்களின் நச்சரிப்புமுண்டு.

இடபம்: திருப்திகரமான திருப்பத்திற்கு இடமுண்டு விருந்தினர்களின் வருகைக்கும் இடமேற்படும் தெய்வ சிந்தையும் ஏற்படும்.

மிதுனம்: தொழில் துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும். வெளியிடத்திலிருந்து வரவேற்கத்தக்க செய்திக்கும் இடமுண்டு. உற்சாகமான தினம்.

கடகம்: நீண்டநாள் நண்பர் ஒருவர் உமக்கு உதவுவர். பணவிடயத்தில் நல்ல மாறுதல்கள் ஏற்படும். கல்வியிலும் முன்னேற்றமுமுண்டு.

சிங்கம்: சிக்கல்கள் சிலந்திவலை பின்னும் தற்பெருமையின் மூலம் பணம் பறிபோகலாம் தொழிற்துறையிலும் அதிருப்தி ஏற்படும்.

கன்னி: கவலையின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள் அவசரப்போக்கால் ஆபத்துக்கள் உருவாகும் உடல் நலத்தையும் பேணவும்.

துலாம்: பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நண்பராலும் நன்மையுண்டு.

(7-ம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலிய உதவியில்
# தானியங்களை சேமித்துவைக்க புத்தூரில் களஞ்சியம்
### அரச அதிபர் தகவல்

[யாழ்ப்பாணம்]
''நெல், வெங்காயம், மிளசாய், குரக்கன், கடலை, எள்ளு. உழுந்து, பீற்றூட், வாழை போன்ற பயிர்கள் இவ்வருடத்தில் மிகச் சிறந்த விளைவைத் தருமென எதிர்பார்க்கிறேன். இதற்கு கமநலச் சேவை நிலையங்கள், விவசாயப் பணியகம், வெளிக்கள ஆய்வாளர் அனைவரும் உறுதுணையாவர் என்ற நம்பிக்கை எனக்குண்டு.''

இவ்வாறு யாழ். மாவட்ட விவசாய செயற்படு திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருட காலபோகத்தின் போதும் ஏறத்தாழ 8500 ஏக்கர் நெற்பயிர்கள் முற்றாக அழிந்தமையும், 4600 ஏக்கர் பகுதி அழிவாகியுள்ளமையும் அதேபோன்று ஏனைய உணவுப் பயிர்களும் நாற்றுமேடைகளும் அழிந்தமையும் எமது அச்சத்தை அதிகரித்துள்ளது. உருளைக்கிழங்கு உற்பத்தியிலும் விதை உருளைக்கிழங்கைத் தருவிப்பதில் இருந்த முட்டுக்கட்டையே கடந்த வருடங்களில் ஏற்பட்ட பெரு வீழ்ச்சிக்கு காரணமென அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு இவ்வருடத்திலும் 1250 ஏக்கர் நிலத்தில் உருளைக் கிழங்கு பயிரிடப்படுமென உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நீண்டகாலமாக எதிர்பார்த்த மிளகாய்ச் செடிக்கு காப்புறுதி செய்யும் திட்டமும் உருவாகி நடைமுறைப் படுத்தும்நிலையிலுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

விவசாய அபிவிருத்திபற்றி குறிப்பிடுகையில் அவுஸ்திரேலியாநாடு நன்கொடையாக வழங்கிய 75,000 மெற்றிக் தொன் தானியங்களைக் கொள்ளக்கூடிய களஞ்சிமொன்று யாழ். மாவட்டத்திற்கு விவசாய அபிவிருந்தி ஆராய்ச்சி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதனை நெற்சந்தைப்படுத்தும்சபை புத்தூரில் கட்டிமுடித்து யாழ் கமநலச் சேவைத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் இது அறுவடை காலத்தின் போதும் விளைபொருள் தேக்கத்தின்போதும் அவற்றைக் களஞ்சியப்படுத்தி வேண்டிய நேரத்தில் விற்பனைசெய்ய உதவுமென பெருமையுடன் குறிப்பிட்டுள்ள அவ்வறிக்கையில் நாரந்தனை, அராலி ஆகிய இடங்களிலும் சிறு உரக்களஞ்சியங்கள் மாவட்ட அபிவிருத்திச்சபை நிதியினால் வேகமாக உருவாக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ச]

---

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்,
அராலி சில்வஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் உதைபந்தாட்டப்போட்டியில் வெற்றி நடை போடும் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் நாளை மறுதினம் நாவாந்துறை சென். நிக்லஸ் விளையாட்டுக் கழகத்துடன் மோதுகிறது.

இப்போட்டி அராலி சில்வஸ்ரார் விளையாட்டுக்கழகமைதானத்தில் பி.பகல் 4 மணிக்கு நடைபெறும். (ச)

---

## தொடரும்
### விமான விபத்துக்கள்

கடந்த வருடம் சுமார் 2000 பேரைப் பலி கொண்ட விமானங்கள், ஆண்டிறுதியில் மேலும் பத்துப் பேரைப் பலி கொண்டன.

அமெரிக்காவில் இரு சிறு விமானங்கள் விழுந்து நொருங்கியதில் இப் பத்துப் பேரும் மாண்டுள்ளனர்.

சிறிய செஸ்னு விமானமொன்று நொருங்கியதில் அதில் இருந்த 6 பேரும், வாஷிங்டன் அருகில் நெடுஞ்சாலை ஒன்றில் சிறு மூனி விமானம் ஒன்று விழுந்ததில் அதில் இருந்த 4பேரும் மரணமானுர்கள். (செ)

---

## இன்றையபலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விருச்சிகம்: முன்னேற்றப் பாதையில் தடைகள் தென்படும் சகோதர வழியாலும் சஞ்சலச்செய்திக்கு இடமுண்டு தொழில் துறையிலும் தொல்லைகள் உருவாகும்.

தனுசு: மாணவர்களாயின் கல்வியில் முன்னேற்றமுண்டு. சிலருக்கு ஆராய்ச்சிகளில் ஆர்வம் பிறக்கும். வாகனச்சுகமும் உண்டு.

மகரம்: புதிய பாதை ஒன்று உங்களை எதிர்நோக்கும் நீண்ட நாள் பிணி இன்று நிவர்த்தியாகும். புத்திரராலும் மனதிற்கு திருப்தியேற்படும்.

கும்பம்: பொறுமையின் நிழல் உங்களைத்தொடரும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர்கள். அமைதி நன்று.

மீனம்: களஸ்திரவழியால் கண்ணியம் சேரும். அறிஞர்களின் வருகை உற்சாகத்தையளிக்கும். இல்லமும் பல்கலைக் கழகமாக மாறும்.

திருமலை
வே. ரவீந்திரன்

---

## ஐ. நா. ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
கம், அது விளங்காத அரசியல்.

''தமிழ் இனத்தைப்பற்றி எண்ணிப்பார்க்கும்போது இது தமிழனுக்குரிய மண் என்ற உணர்வு சோழர் காலத்தில் இருந்தே நம்மிடம் இல்லை.

'ஒரு நாட்டுக்கு உரிய மக்கள் என்ற உணர்வோடு தமிழன் வளராமல் போய்விட்டான். எனவே இலங்கையில் எந்தக்கொடுமை நடந்தாலும் இங்கே உள்ள தமிழன் அதை உணரமாட்டான்.

### தமிழன் கதி!

''இன்று தமிழன் என்று சொல்லவே விரும்பாத அளவுக்கு வாழ்ந்துகொண்டிருக்கிறுன். தமிழனுல் தமிழ் வாழவில்லை. பாதிரியர்களால்தான் வளர்ந்தது. அவர்கள் செய்த தொண்டு தமிழுக்கு உலகில் நிலையான இடத்தைத் தேடித் தந்தது. ஆனுல் இப்போது அதன் வளர்ச்சி மக்களைவிட்டு விலகிச்செல்கிறது. மக்களிடம் தமிழ்பற்று குறைந்துஉள்ளது.

### முஸ்லிம்

''உலகில் முஸ்லிம்களுக்கு என 26 நாடுகள் உள்ளன. இதற்குக் காரணம் அவர்களில் பல பிரிவு இல்லை. ஆனுல் தமிழன் அரசு அடிப்படையிலும், சமய அடிப்படையிலும் ஒன்ருக இல்லை. தமிழனுக்கு என்று ஒரு சமயம் இருந்தாலாவது தமிழைக் காப்பாற்ற முடியும். தமிழனுக்கு இன உணர்வு வேண்டும் என்று நான் சேர்ந்துள்ள இயக்கத்தின் சார்பில் கூறவில்லை. நானும் தமிழன் என்பதால் கூறுகிறேன்.

''ஒரு சீக்கியனே, ஒரு முஸ்லிமோ தங்களை அடையாளம் கண்டுகொள்ளமுடியும். ஆனுல் தமிழனை எங்கேயாவது தமிழன் அடையாளம்காண முடியுமா? இளைஞர்களுக்கு அந்த உணர்வை வளர்க்கவேண்டும்.

### சுயமரியாதை!

''ஈழத்துஇளைஞர்களைப்பார்க்கும்போது சங்ககாலத்து வீரர்களைப் பார்க்கும் உணர்வு ஏற்படுகிறது என்று நான் கூறினேன். அந்த உணர்வு தமிழக இளைஞர்களுக்கும் வரவேண்டும்.

---


## மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு
**JANUARY 8-ந் திகதி**
எமது பிரதிநிதி இங்கிருந்து அழைத்துச்செல்வார்.

மற்றும்
**பாஸ்போட், பொண்ட், விசா**
என்பவற்றுக்கும்

யாழ்ப்பாணத்தில் பணத்தைக் கொடுத்து கொழும்பில் பெறுவதற்கும்,
கொழும்பில் பணத்தைக் கொடுத்து யாழ்ப்பாணத்தில் பெறுவதற்கும்
வசதி செய்து கொடுக்கப்படும்.

# லிட்ருஸ் ரவல்ஸ்

R. G. BUILDINGS,
70, Stanley Road,
JAFFNA.

No. 60, Sea Beach Road,
Pettah,
Tel. No. 29148

மற்றும் இத்தாலி, பிரான்ஸ் போவதற்கு பாஸ்போட் கொடுத்தவர்கள்
உடன் தொடர்பு கொள்ளவும்.


---

## திரிபோஷா மா விநியோகம்

[பண்டத்தரிப்பு]
கொழும்பிலுள்ள 'கெயர்' நிறுவனம் பல மாத இடைவெளிக்குப்பின்னர் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு 30 பக்கற் திரிபோஷா மாவை கடந்த வாரம் புகையிரதம்மூலம் அனுப்பி வைத்துள்ளது.

இம்மாதம் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் சிறுவர் நல சிகிச்சை நிலையத்லே் வைத்து போஷாக்குக் குறைந்த இப்பகுதி குழந்தைப் குள்ளைகளுக்கு இந்த திரிபோஷா மா விநியோகிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)
மீனுட்சி அம்பாள் அலங்கார உற்சவம் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து 26 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. [ப]

---

## சேவையில் முன்னணி

(யாழ்ப்பாணம்)
அரசாங்கத்தால் பதிவுசெய்யப்பட்ட யாழ்.மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாசத்தின் கீழ் இயங்கும் 675 சனசமூகநிலையங்களுக்கும் சனசமூகநிலையங்களின் வளர்ச்சி கருதி சமய நூல்கள், பிரசுரங்கள், செய்தி ஏடுகள் உட்பட பல்வேறு வகையான நூல்கள் சிவதர்ம வள்வல் திரு க. கனகராசாவினுல் அனுப்பிவைக்படவுள்ளன.

இதற்கானஒழுங்குகளை யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச பொதுச் செயலாளர் கௌரவ எஸ். எஸ். வரதராசா செய்து வருகிறுர். இந்நூல்களைப் பெறவிரும்பும் சனசமுகநிலையங்கள் தம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (ச)

---

## அகதி நிலைக்கு ஆயர் கவலை

(யாழ்ப்பாணம்)
''உங்களுக்கு நேர்ந்திருக்கும் கதியை எண்ணிக் கலங்குகிறேம். உங்கள் நிர்க்கதியை உணர்ந்து எங்கள் திருச்சபை உள்ளும் புறமும் நிதி திரட்டி ஏதோ ஒரு சிறு காணிக்கையாக இன்று இந்தச்சிறு உதவியைச் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேம். உங்கள் துயரம் நீங்கி சொந்த இடங்களுக்குச் சென்று மீண்டும் வாழ்வுபெற ஆண்டவன் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.''

இவ்வாறு தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆயர் அம்பலவாணர் பருத்தித்துறை தம்பசெட்டியில் அமைந்துள்ள அகதிகள் முகாமில் வைத்து அண்மையில் திருமலை அகதிகளுக்கு பால்மா, துணிப் பொட்டலங்களை வழங்கிய போது குறிப்பிட்டார்.

ஆயர் அவர்களை பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வச் சபைத் தலைவர் திரு. ந. குணசீவன், செயலாளர் திரு. நா. சிவசுப்பிரமணியம், பொருளாளர் திரு. சி. தயாநிதி பருத்தித்துறை பிரஜைகள் குழுத் துணைச்செயலாளர் திரு. ஆ. தேவராசன் ஆகியோர் வரவேற்றனர். ஆயர் அம்பலவாணர் அவர்களுடன் அருத்திரு. ஜெயகுமாரன் அவர்களும் தொண்டர்களும் வந்திருந்தனர்.

---

## ஆஸ்- இந்திய கிரிக்கட்
## ஸ்ரீகாந்தின் அபாரத் தடுப்பு

(சிட்னி)
இந்திய- அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3ம் டெஸ்டின் முதலாம் நாளான நேற்று இந்தியா அபாரமாக ஆடி ஒரு விக்கெட் நஷ்டத்திற்கு 334 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆட்டத்தின் சிறப்பம்சமாக ஸ்ரீகாந்தின் 116 ஓட்டங்களும் கவாஸ்கரின் 132 (ஆட்டமிழக்காமல்) ஓட்டங்களும் அமைந்திருந்தன,

ஸ்ரீகாந்தின் 116 ஓட்டங்கள் 19 பவுண்டரிகளும் 1 சிக்ஸரும் அடங்கியிருந்தது.

கவாஸகரின் 32வது டெஸ்ட் செஞ்சரி இதுவாகும்.

முன்னதாக 'டாஸி'ல் ஜெயித்த இந்திய கப்டன் கபில்தேவ் தமது அணி துடுப்பெடுத்தாட அனுமதித்தார். [செ]

---

## அராலி கிழக்கு ஐக்கிய நாணய சங்கம்

[அராலி]
அராலி கிழக்கு அம்பாள் ஐக்கிய நாணய சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

சங்கத்தின் தற்காலிகத் தலைவர் சு. கந்தையா தலைமை வகித்த இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் க. சுப்பிரமணியம், உப தலைவர் சு. கந்தையா, செயலாளர் ச. க. இரத்தினம், பொருளாளர் மு. ஆனந்தம் ஆகியோர்.

மற்றும் பல நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவாகினர்.

---

## ஒய்வுபெற்ருர்

[பண்டத்தரிப்பு]
சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாலய ஆசிரியர் திரு. ஆ. சின்னத்துரை தமது 35 வருட ஆசிரிய சேவையிலிருந்து கடந்தமாதம் ஓய்வுபெற்ருர்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த இவர் தமது பதவிக்காலத்தில் அனுராதபுரம், கண்டி ஆகிய மாவட்டங்களிலுமுள்ள பாடசாலைகளிலும் பணியாற்றியுள்ளார்.

---

## முஸ்லிம் விவாகப் பதிவுகாரர்

[யாழ்ப்பாணம்]
வவனியா, பட்டானிச்சிப் புளியங்குளத்தைச் சேர்ந்த ஜனுப் முஹிதீன்பிச்சை அகமது சபீர் என்பவர் வவனியா தெற்கு முஸ்லிம் விவாசப் பதிவுகாரராக பதிவாளர்நாயகத்தால் நியமிக்சப்பட்டுள்ளார். இவர் வவனியா, முல்லைத்தீவு மாவட்டத்தின் முன்னுள் ஆரம்ப குவாஸியும், சமாதான நீதவானுமாகிய மர்ஹூம் எஸ். எம். முஹிதீன்பிச்சை அவர்களின் புதல்வரும், சிறந்த சமூகத் தொண்டனுமாவார். [மா]

---

## சனசமூகநிலைய நிர்வாகிகள்

(அளவெட்டி)
அளவெட்டி கணேஸ்வரப் சித்திவிநாயகர்சனசமூக நிலைய வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில் 86ம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைக் குழுவில்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சு.பொன்னுத்துரை, உபதலைவர் அ. கந்தையா, செயலாளர் த.விஜயசிங்கம், உபசெயலாளர் ச. குமாரதேவா. மற்றும் பல உறுப்பின்ர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## பாடசாலை குடிநீர் பிரச்னை தீர்ந்தது

(பண்டத்தரிப்பு)
தாவடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நீண்டகாலமாக நிலவிவந்த குடிதண்ணீர் தட்டுப்பாடு நீங்கியுள்ளது. இதற்கென 3,500 ரூபா பெறுமதியான மின் மோட்டர் ஒன்றை முறிவு தறிவு வைத்தியர் டாக்டர் எஸ். சோமசுந்தரம் இப் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்துள்ளார்.

ஊர்ப்பொது மக்கள் சிலரும் அளித்த உதவிகளைக்கொண்டு இதற்கான உபகரணங்கள் பொருத்தப்பட்டு மாணவர்களுக்கு இலகுவாக குடிதண்ணீர் பெறவசதி செய்யப்பட்டிருப்பதாக தாவடி பிரஜைகள் குழுத் தலைவர் திரு. சி செல்லத்துரை தெரிவித்தார்.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## மலேசியாவில் 'இவர்கள்' நிலை

(கொழும்பு)

வேலை வாய்ப்பு தேடி மலேசியா சென்ற 250 பேர் வேலையின்றித் தவிக்கின்றனர்கள்.

விசா காலம் முடிவடைந்ததும் இவர்கள் கைது செய்யப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

கொழும்பு தொழில் முகவர் ஒருவர் இது தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வருகிறார். (க)

## ரூ. ஒரு லட்சம் பொருட்கள் கொள்ளை!

(வவனியா)

முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

வர்த்தகர் ஜனுப் கே. காதர் என்பவரின் வீட்டிலேயே பொருட்கள் களவாடப்பட்டதாகப் புகார்செய்யப்பட்டுள்ளது. (மா)

## போதைவஸ்து: 5 இலங்கையர் கைது

[கொழும்பு]

எகிப்தில் போதைவஸ்து கடத்தியதாக கூறப்படும் 5 இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள்குற்றவாளிகளாக காணப்பட்டால் மரணதண்டனை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கனகபுரத்தில் நடந்த சம்பவம்: சூடுபட்ட ஆசிரியை கூறும் துயரக்கதை

[யாழ்ப்பாணம்]

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சூட்டுக்காயத்துடன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ள 'ரியூசன்' ஆசிரியை ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை கிளிநொச்சி கனகபுரத்தில் நிகழ்ந்துள்ளது. கனகபுரத்தைச் சேர்ந்த மார்க்கண்டு ஞானேஸ்வரி(24 வயது) என்பவரே இவ்வாறு துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவராவார். சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:

''அன்றையதினம் நான் எனது நண்பிகளான பாரதி, சுவர்ணு ஆகியோருடன் வீட்டிலிருந்து கதைத்துக்கொண்டிருந்தேன். மாலை 6மணியிருக்கும் எமது வீட்டின் முன்பாக லொறி ஒன்று திடீரென நிறுத்தப்பட்டது குண்டுச் சத்தங்கள் சரமாரியாகக் கேட்டன. லொறியிலிருந்து சுமார் 25க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஆயுதங்களுடன் இறங்கி எமது வீட்டுக்குள்வந்தார்கள். அப்போது துப்பாக்கியால் சுட்டுக்கொண்டேவந்தார்கள். எனக்கு தோள்மூட்டில் சூட்டார்கள். வீட்டிலிருந்தோர் பாய்ந்துஓடி குசினிக்குள் ஒளித்துக்கொண்டார்கள். என்னால் ஓடமுடியவில்லை.

''அப்போது இராணுவவீரர் ஒருவர்வந்து இந்த வீட்டுக்குள் வெள்ளைச்சேட்டுடன் ஓடிவந்தவர் எங்கே?'' என்று தமிழில் கேட்டார் நான் தெரியாது என்றேன்.

''அதன்பின் வீட்டுக்குள் இருக்கும் அனைவரையும் வெளியே வரும்படியும், வராவிட்டால் வீட்டுடன் சேர்த்து தீமூட்டப்போவதாகவும் பயமுறுத்தினார்கள். பயத்தினால் குசினிக்குள் ஒழித்திருந்த ஆறு பெண்களும் வெளியே வந்தார்கள். என்னுடன் சேர்த்து ஏழு பெண்களையும் முற்றத்தில் முழங்காலில் நிற்கும்படி சட்டளையிட்டார்கள். நாங்களும் அவ்வாறே நின்றோம்.

''எங்களைச் சுட்டுவிடாதீர்கள் என்று குளறினோம். அப்போது அவர்கள், ''நாங்கள் கொட்டியாக்கள் அல்ல உங்களைச் சுடுவதற்கு. கொட்டியக்கள்தான் எங்களைச் சுட்டுள்ளார்கள்'' என்று கூறி தங்களது உடலிலிருந்த சூட்டுக்காயங்களைக் காட்டினார்கள் சுமார் அரைமணி நேரமாக முழங்காலில் இருந்தோம்.

''அதன்பின்னர் எமது வீட்டிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் பக்கத்து வீட்டுக்குச்சென்றார்கள். அங்கு எவரும் இல்லை. வீட்டைசோதனையிட்ட அவர்கள் வீட்டிற்குத் தீமூட்டிச் சென்றார்கள். வீடு முற்றாக எரிந்துவிட்டது.

சுமார் 2மணி நேரமாக கனகபுரம் வீதியில் இராணுவத்தினர் நடமாடியதால் ஆஸ்பத்திரிக்கு செல்லமுடியவில்லை. வேதனையில் துடித்தேன். இராணுவ நடமாட்டம் ஓய்ந்ததும் எமது வீட்டிற்குவந்த பிரஜைகள்குழுப் பிரமுகர் திரு. சக்திவேல் வண்டில் ஒன்றில் என்னை டாக்டர் சுப்பையா வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கு எனக்கு முதலுதவி அளிக்கப்பட்டு, அங்கிருந்து அதே வண்டிலில் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெறமுடியாத நிலையில் அம்புலன்ஸ் மூலம் யாழ். அரசினர் வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டேன்'' என்று கூறினார். (ச)

## இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் லிகிதராகக் கடந்த 5 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றிய கரவெட்டியைச் சேர்ந்த திரு. சி. ரவீந்திரன் கொழும்பு உள்ளூராட்சித் திணைக்களக் காரியாலயத்திற்கு இம்மாதம் முதல் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

சனசமூக நிலையங்களின் வளர்ச்சி இவர் ஆற்றிய சேவைகளைப் பாராட்டி யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுச் செயலாளர் திரு. எஸ். எஸ். வரதராசா பாராட்டுக் சடிதமொன்றை அனுப்பியுள்ளார். [ச]

## தமிழகம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களால் நடுக்கடலில்வைத்து துப்பாக்கி முனையில் சூறையாடப்பட்டுள்ளன!

உடமைகளையும், தங்கள் அடையாள அட்டைகளையும் கொள்ளையர்களிடம் பறிகொடுத்த 20 அகதிகளும் கலங்கிய வண்ணம் மீண்டும் தாங்கள் புறப்பட்ட இடத்துக்குத் திரும்பினராம்.

கடந்த 31ம்திகதி இரவு இப்பரிதாபசம்பவம் இடம்பெற்றது.

வன்முறைச் சம்பவங்களினால் தங்கள் சொத்து சுகமெல்லாம் இழந்து அகதி முகாமிலிருந்தவர்களில் 20 பேர் இனிமேல் இங்கு தங்களால் வாழமுடியாதென்று கருதியே இவர்கள் தமிழ்நாடு செல்ல முடிவு செய்தார்கள்.

தாலிக்கொடிகள், சங்கிலிகள், மோதிரங்கள், வீடியோடெக்குகள், ரொக்கப்பணம் ஆகியனவும் அகதிகளுள் சிலர் வைத்திருந்தனராம்.

உடுத்த உடையுடன் மீண்டும் தாங்கள் புறப்பட்ட இடத்தை வள்ளத்தில் வந்தடைந்த அகதிகள், இப்பொழுது அகதிகள் முகாமுக்குத் திரும்புவதற்கு பஸ் பிரயாணச் செலவுக்குக் கஷ்டப்படுவதாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இருவர் தெரிவிக்கின்றனர். (மா)

## ஆஞ்சநேயர் ஜயந்தி

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி ஜயந்தி உற்சவம் இம் மாதம் 10ம் திகதி நடைபெறும். (ப)

## அகதிகளுக்கு தாராள உதவி

(புலோலி)

தென்னிந்திய திருச்சபை பருத்தித்துறையிலுள்ள 192 வவனியா, திருகோணமலை அகதி குடும்பங்களுக்கு சுமார் 75 000 ரூபா பெறுமதியான உடுபுடவைகள், பாவனைப் பொருட்களை வழங்கியுளளது.

பருத்தித்துறை, தம்பசெட்டியிலுள்ள அகதிகள் முகாமில் வைத்து தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த வணபிதா. அம்பலவாணர் அடிகளாரால் இவ்உடுபுடவைகளும் பாவனைப் பொருட்களும் அகதிகளுக்கு வழங்கப்பட்டது.

## சுதந்திரக்கட்சி மத்திய கமிட்டி திங்கள்கூடும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கமிட்டி எதிர்வரும் திங்கட்கிழமைகூடி, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் எதிர்காலம் பற்றி விரிவாக ஆராயும்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா கந்தையா

திருமதி அன்னம்மா கந்தையா அவர்கள் காலமானார். இவர் காலஞ்சென்ற நா. மு. கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை (வடகொழும்பு மருத்துவக்கல்லூரி), தவராணி அவர்களின் அருமைத் தாயாரும், பத்மனேஸ்வரி, மகேந்திரன் அவர்களின் மாமியாரும், சுதாமதி, அமரன், சைலன், முரளி, கோபி, சணு, தூநகை, பண் ஆகியோரின் பேத்தியுமாவார் ஈமச்சடங்குகள் 4-01-86 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு உரும்பராயில் நடைபெறும்.

உரும்பராய் தெற்கு,
உரும்பராய். (C 20)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி முத்தையா

மலேயன் பென்சனியர் இளையதம்பி முத்தையா காலமானார். இவர் அன்னம்மாவின் அன்புக் கணவரும். தேவிகராணி (ததி), டோரு (லண்டன்). சுசிலாதேவி (Project Officer Export Development Board), குலதிலகன் (Joy) கணேசானந்தன் (Bonny) Germany சிவகுமாரி (Queenie) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. ஆனந்தராஜா, ரமேஸ், சிவனேஸ்வரியின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 4-1-86 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

Dr. ஆனந்தராஜா,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(C 19)

## மரண அறிவித்தல்



### திரு. யக்கோப் ள்ளை யோசப் கிறகறி (பாக்கியமுத்து)

[இளைப்பாறிய யாழ். அரசாங்க கூட்டுத்தாபன பொறுப்பதிகாரி (D. K.)]

அவர்கள் 29-12-1985-ல் காலமாகிவிட்டார். இவர் திருமதி லூர்ஸ் அன்னரஞ்சிதத்தின் அருமைக் கணவரும், றஞ்சனி, ருஜினி, சாந்தினி, கமலினி, அன்ரன், டன்ரன், யோகேஸ்வரன், ஜெயா ஆகியோரின் அன்புத்தந்தையும், செபஸ்ரியன் அன்ரன்ராஜசிங்கம், Dr. ஞானஜோதி ஆகியோரின் அன்பு மாமனாரும், தானியா, அகிலன், ஷோபனா, ரேஷானு ஆகியோரின் பேரனுமாவார் அன்னாரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை (4-1-1986) மாலை 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக அவரது இல்லத்தில் இருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார், உறவினர் நண்பர்கள், அன்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

புதிய இல. 6, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், (C 23)

## மரண அறிவித்தல்

### சி. கனகசபை (வர்த்தகர்)

புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாகோ பிரபல வர்த்தகர் சின்னத்தம்பி-கனகசபை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு- திருமதி சின்னத்தம்பி- சேதுப்பிள்ளை அவர்களின் அருமை மகனும், காலஞ் சென்ற சின்னத்தம்பி (பிரபல வர்த்தகர்-மாகோ), திருமதி சின்னத்தம்பி-சின்னத்தங்கம் அவர்களின் அருமை மருமகனும், கண்ணம்மாவின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (கலசம்பாலா), சிவசுப்பிரமணியம் (எயர் லங்கா), செந்தில் வேல்முருகன் (சுவிஸ்), ஸ்ரீமுருகன் (பிரான்ஸ்), யோகேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அருமைத் தந்தையும், கலாநிதி சிவகடாட்சம் (விவசாய ஆராய்ச்சி நிலையம், கிளிநொச்சி), குகதாசன் (மகாவலிபோட் படவரைஞர், கொழும்பு), சசிகலா, ஜெயந்தி, கோமளநாயகி ஆகியோரின் மாமனும், காலஞ் சென்றவர்களான பொன்னையா [மலேசியா], இராமலிங்கம் [மலேசியா], இராசம்மா, செல்லம்மா [மலேசியா] ஆகியோரின் அருமைச் சகோதரரும், புங்குடுதீவு காலஞ்சென்ற விதானையார் க. மு சின்னத்துரை, மலேசியா அம்பவாணர், மாகோ குமாரசாமி (T.K. Traders- யாழ்ப்பாணம்) அருளம்பலம் பிரபல வர்த்தகர் (மாகோ), லிங்கநாதன், ஆசிரியர் கனலிங்கம் B A. (Hons) ஆகியோரின் அருமை மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள்[03-01-86]வெள்ளிக்கிழமை இன்றுபிற்பகல் 3மணிக்கு அன்னாரின்இல்லத்தில் [இல. 18. 1ம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்] நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
திருமதி கண்ணம்மா [மனைவி] (22)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.